ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

22.05.2013 - மலர் 10, இதழ் 12

## 5 வயது சிறுமியின் அரிய கண்டுபிடிப்பு





## இயற்கை அனர்த்தங்களும் பாதுகாப்பு வழிமுறைகளும்






விலை ரூபா 15/-

## பரிணாமவாதத்தின் தந்தை

# சார்ள்ஸ் டாவின்




மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

# 'மாமன்னன் பண்டாரவன்னியன்'



14

அரியாலையூர் சி.சிவதாசன்

பண்டாரவன்னியனும் அவனது படைவீரர்களில் சிலரும் ஆங்கிலேயப் படைகளிடம் அகப்பட்டுக்கொண்டனர். தனக்கும் தன்படை வீரர்களுக்கும் ஏற்பட்ட துன்பியல் நிலை கண்டு பண்டாரவன்னியன் ஆத்திரம் கொண்டான். கெப்டன் றிபேக் ஐப் பார்த்து, "ஏய்.. ஆங்கிலேயனே! என்னை நீ பிடித்துவிட்டால் எம் மண்ணைப் பிடித்துவிட்டோம் என்ற எண்ணமா உனக்கு? நான் உயிரோடு இருக்கும்வரை, மானமுள்ள வன்னியர்கள் இம் மண்ணில் வாழும்வரை உங்களை நிம்மதியாக வன்னி மண்ணில் இருக்க விடமாட்டோம்" என்று முழங்கியதைக் கேட்டு சீற்றமடைந்த கெப்டன் றிபேக், "பண்டாரவன்னியா நீ இப்போது எம் கைதி. எம்மிடமிருந்து தப்பிக்கலாமென்று கனவிலும் நினைக்காதே! உன்னைப் பிடிக்கவேண்டுமென்று ஆங்கிலேய நிர்வாகம் இட்ட கட்டளையை பலநாள் வகுத்த திட்டத்தின்படி நான் நிறைவேற்றி இருக்கிறேன். அதற்கு எமக்குத் துணைநின்றவர்கள் உன் மண்ணில் வாழும் வன்னியர்கள்தான். கரிக்கட்டு மூலையான் கதிர்காம நாயக முதலியாருக்கு பதவி ஆசை காட்டி உன் வன்னி மண்ணை அவனுக்குத் தருவதாகக் கூறினோம். அந்த முழு முட்டாளும் எனது வாக்கை வேத வாக்கென நம்பிவிட்டான். இப்பொழுது வன்னி மண்ணுக்கு நாங்களே சொந்தக்காரர்கள். நீ விரும்பினால், எங்களோடு ஒப்பந்தம் செய்து உனது அரசுரிமையைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், எங்களுக்கு விசுவாசியாக இருந்து கப்பம் கட்டி அரசு செலுத்தவேண்டும். இதற்கு என்ன சொல்கிறாய்?" என வினவினான் கெப்டன் றிபேக்.

"என்னைக் கட்டிப் போட்டுவிட்டு வீரம் பேசும் வெள்ளையனே! என் கட்டுக்களைக் களைத்துவிடு. என்னோடு நேருக்கு நேர் போரிடு. அதில் உனக்கு வெற்றி கிட்டுமானால், நீ சொல்வதை நான் கேட்கிறேன். அதற்கு நீ சம்மதமா?" என்று கோபத்தோடு கேட்டான். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த கெப்டன் றிபேக், "பண்டாரவன்னியனே! எம்மிடம் இருக்கும் இவ்வளவு நவீன போர்க்கருவிகளைப் பார்த்துமா நீ என்னைப் போருக்கு அழைக்கிறாய்? உன் ஈட்டிகளையும், வாள்களையும் நம்பியா வீரம் பேசுகிறாய்? சரி கட்டவிழ்த்து விடுகிறேன். எங்கே உன் வீரத்தைக் காட்டு"என்றான்.

கெப்டன் றிபேக் முன்னர் நடந்த நிகழ்வை நினைத்தான். அன்று முல்லைத்தீவுக் கோட்டைக்கு அவன் பொறுப்பாக இருந்தபோது, பண்டாரவன்னியன் அக்கோட்டையைத் தாக்கி அழித்தான். அப்பொழுது தம்மை அவன் கொன்றிருக்கலாம். அல்லது சிறைப் பிடித்திருக்கலாம். எனினும், பண்டாரவன்னியன் எம்மை யாழ்ப்பாணம் நோக்கி தப்பிச் செல்ல வழிவிட்டான்.



## பண்டாரவன்னியனின் வீரம்

அவனல்லவா சுத்த வீரன். போர் தர்மம் மிக்கவன். அவனுக்கு இன்று போர் புரிய சந்தர்ப்பம் அளிப்பது தவறில்லை.... பண்டாரவன்னியனும் பிடிபட்ட வன்னி வீரர்களும் கெப்டன் றிபேக்கால் கட்டவிழ்த்து விடப்பட்டனர்.

"கெப்டன் உன் செயலைப் பாராட்டுகிறேன். எங்கே உன் வாளை எடு. உன் வீரத்தைக் காட்டு" என்றான் பண்டாரவன்னியன். பண்டாரவன்னியனுக்கும் கெப்டன் றிபேக்கிற்கும் இடையே மிகக் கடுமையான வாட்போர் நிகழ்ந்தது. வாட்போர் புரிவதில் பண்டாரவன்னியன் வல்லவன். அவன் கெப்டன் றிபேக்கைக் காயப்படுத்தினான். கெப்டன், பண்டாரவன்னியனின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நிலத்தில் சாய்ந்தான். அப்பொழுது கெப்டனின் நிலைகண்டு ஆத்திரமடைந்த ஆங்கிலேய வீரர்கள் பண்டாரவன்னியனையும், அவன் படைகளையும் தாக்க முற்பட்டார்கள். கெப்டன் றிபேக் சைகை காட்டி அவர்களைத் தடுத்தான். இதுதான் சந்தர்ப்பம் எனக்கண்ட பண்டாரவன்னியனும் அவன் படைகளும் குதிரையிலேறி தெற்கு நோக்கி நெடுங்கேணிச்சாலையில் சென்று தப்பித்துக்கொண்டனர். காயப்பட்ட றிபேக்கை அவனது படைகள் தூக்கிச் சென்று காயங்களுக்கான மருந்திட்டனர். உயர்ந்த தோற்றம், விரிந்த மார்பு, ஒடுங்கிய இடை, பரந்த நெற்றி, உரமேறிய தோள்கள், லாவகமாக வாள்வீசிப் போரிடும் தன்மை. எதற்கும் அஞ்சாத துணிச்சல் அத்தனையும் கொண்ட அந்தப் பண்டாரவன்னியனை மனதுக்குள் எண்ணி கெப்டன் றிபேக் ஆச்சரியமடைந்தான்!

(தொடரும்)

# அமிலத்தன்மையாக மாற்றமடையும் ஆர்க்டிக் பெருங்கடல்



ஆர்க்டிக் பெருங்கடலின் பல பகுதிகளில் கரியமில வாயுக்களின் வெளியேற்றம் காரணமாக, பெருமளவில் அமிலத் தன்மையுடன் காணப்பட்டன. சர்வதேச அளவில் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான நோர்வே ஆய்வு மையம் நடத்திய ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. இதன் காரணமாக, கடல்வாழ் உயிரினங்களிடையே அதிகளவில் மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த மாறுதல்கள் எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றி உறுதியாகக் கூற முடியவில்லை என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கரியமில வாயுவின் தாக்கம் காரணமாகவே, புவி வெப்பமடைகிறது என்பது பரவலாக அறியப்பட்ட ஓர் உண்மை என்றாலும் கரியமில வாயுவை கடல், காற்றிலிருந்து ஈர்த்துக்கொள்ளும்போது, கடல்நீர் அமிலத்தன்மை கொண்டதாக மாறுகிறது என்பது இதுவரையில் கண்டறியப்படாமலேயே இருந்துள்ளது என்று சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். குளிர்ந்த நீரில் கரியமில வாயு வேகமாக உள்வாங்கப்படும் என்பதால், குறிப்பாக ஆர்க்டிக் கடற்பகுதி விரைவாக அமிலத்தன்மை வாய்ந்ததாக மாறக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# 5 வயது சிறுமி கண்டுபிடித்த 'ஆதிகால டைனோஸர் இனம்'



டைனோஸர் படிமத்தைக் கண்டுபிடிக்கும்போது டேசி மொரிஸுக்கு 5 வயது.

ஆதிகாலத்தில் வசித்ததாகக் கருதப்படுகின்ற டைனோஸர் இனமொன்றின் படிமத்தை



டேசி மொரிஸின் வீட்டிலுள்ள இயற்கை அருங்காட்சியகத்தின் ஒரு பகுதி.



எத்தர்ஃபீல்ட் கரையோரப்பகுதி.

பிரித்தானிய பாடசாலை மாணவி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். அந்த மாணவியின் பெயர் 'டேசி மொரிஸ்' என்பதாகும். இந்த டைனோஸர் படிமத்தை டேசி மொரிஸ் கண்டுபிடிக்கும்போது அவருக்கு வயது 5 ஆகும்.

2008 ஆம் ஆண்டளவில், 'ஐல் ஒஃப் வைட்' (Isle of Wight) என்ற தீவின் கரையோரப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த படிமத்திற்குரிய எலும்புத் தொகுதிகளை, படிம ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து 5 ஆண்டுகளாக ஆராய்ந்து வந்துள்ளனர். அதன் விளைவாக, குறித்த எலும்புத் தொகுதியானது, இதுவரை கண்டுபிடிக்கப்படாத பறக்கும் டைனோசர் இனத்தினுடையது என்ற விடயம் தெரியவந்துள்ளது. இந்த படிமத்தினைக் கண்டுபிடித்தபோது, டேசி மொரிஸுக்கு ஐந்து வயதாக இருந்த நிலையில், டேசியின் கண்டுபிடிப்பு குறித்த ஆய்வுகள் இவ்வருடமே பூர்த்தியடைந்துள்ளன. இச்சந்தர்ப்பத்தில் தற்போது டேசிக்கு ஒன்பது வயது பூர்த்தியடைந்துள்ளது. இந்த ஆய்வுகளின் முடிவாக, குறித்த படிமத்திற்குரிய டைனோசர், இற்றைக்கு 115 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தொன்றாகும் என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



115 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்த பறக்கும் டைனோஸர் எப்படி இருந்திருக்கும் என்பது குறித்து ஓர் ஓவியரின் கற்பனையில்...

டேசியின் வீடு அமைந்துள்ள பகுதிக்கருகிலுள்ள ஐல் ஒஃப் வைட் தீவின் தென்பகுதியின் எத்தர்ஃபீல்ட் கரையோரப்பகுதியிலேயே டேசி இந்த படிமத்தினைக் கண்டுபிடித்திருந்தார். கரையில் ஏதோ படிமப்பகுதிகள் புதைந்திருப்பதனைக் கண்ட டேசி, அது குறித்து தனது குடும்பத்தாருக்குத் தெரியப்படுத்தியபோது, அவர்கள் மார்ட்டின் சிம்ப்சன் என்ற டைனோஸர் தொடர்பான விசேட நிபுணருக்கு இதுபற்றி அறிவித்திருந்தனர். அவரின் ஆலோசனைக்கமைய, டேசி மொரிஸின் குடும்ப உறுப்பினர்கள் இந்த படிமப்பகுதிகளை பிரித்தானியாவின் இயற்கை விஞ்ஞான அருங்காட்சியகத்திற்கு வழங்கியுள்ளனர். அங்கு குறித்த படிமத்தைக் கண்டுபிடித்த டேசி மொரிஸின் பெயரைப் பின்பற்றி 'வெக்டிட்ரகோ டேசிமொரிஸே' (*Vectidraco Daisymorrisae*) என்ற விஞ்ஞானப் பெயரை அந்த படிமத்திற்கு விஞ்ஞானிகள் சூட்டினர். இதனை அடுத்து கடந்த 5 ஆண்டுகளாக இந்த படிமப்பகுதிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

அதற்கமைய, காகத்தின் உடலமைப்பினை ஒத்த இந்த உயிரினம், 'டெரொசர்' (Pterosaur) வகையைச் சார்ந்த பறக்கும் டைனோஸர் இனத்திற்குரியது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டேசிக்கு கிடைத்த டைனோஸரின் முள்ளந்தண்டுப்பகுதியின் எலும்புகள் 40 மி.மீற்றர் நீளம் கொண்டவை. இதன்படி, குறித்த விலங்கின் முழுமையான நீளம் 350 மி.மீற்றர் ஆகும் என்றும் அது சிறகுகளை விரித்தால் 750 மி.மீற்றர் நீளத்திற்கு இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டேசியின் சாதனை குறித்து அவரது தாயார் கூறியபோது, ''நாம் காரில் பயணிக்கும் சந்தர்ப்பங்களில் இறந்த விலங்குகளின் உடலைக் கண்டால் டேசி அவற்றை எடுத்துவந்து விடுவார். அதனை தோட்டத்தில் புதைத்து வைத்து மக்கிப் போன பின்பு எலும்புகளை எடுத்து சேகரிப்பார். நாமும் அவரின் விருப்பத்தை நிறைவேற்ற எப்பொழுதுமே முயன்றோம். அவருக்கு ஊக்கமளித்தோம். அவை தொடர்பான அறிவைத் திரட்டத் தேவையான உதவிகளை செய்தோம். எனது மகள் குறித்து எனக்குப் பெருமையாக இருக்கின்றது'' என்றார்.

இவ்வாறான விடயங்கள் குறித்து தொடர்ந்து தேடல்களை மேற்கொள்வதும் தகவல்கள் மற்றும் ஆதாரங்களை சேகரிப்பதுமே டேசியின் குறிக்கோளாகும். ''நான் இந்த விடயத்தை மிகவும் விருப்பத்துடன் செய்கிறேன். இந்த பொழுதுபோக்கினை தொடர்வதே எனது நோக்கமாகும்'' என்று டேசி குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவின் இயற்கை விஞ்ஞான அருங்காட்சியகத்திற்கு இந்த டெரொசர் படிமம் கையளிக்கப்பட்டதனை அடுத்து, ஐல் ஒஃப் வைட் தீவு பிரித்தானியாவின் 'டைனோஸர் தலைநகர்' என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கவிதா**



'Daisy and the Isle of Wight Dragon' நூலின் ஆசிரியரும் டைனோஸர் தொடர்பான விசேட நிபுணருமான மார்ட்டின் சிம்ப்சனுடன் டேசி மொரிஸ்.

**வாசகர் முகம்**



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
**எஃப்.அஸ்கா,**
தில்லையடி,
புத்தளம்.

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....

# விண்வெளி உலகம்




பன்-பாலா

இதுவரை....

இராமபுத்திரன் சிறுவர் இருவரையும் பின்னால் வரும்படி சைகை காட்டிவிட்டு உள்ளே நுழைந்தார். அங்கு நடுநாயகமாக படுக்கையொன்றும் அதன் இருபக்கவாட்டிலும் சில கருவி இணைப்புகளும் தெரிந்தன. ''சுதன்...'' என்றார் இராமபுத்திரன். ''ம்..ம்..ம்..'' என்று பதில் மாத்திரம் வந்தது. பிரியனும் அஷ்வினும் ஒருவரையொருவர் பீதியுடன் பார்த்துக் கொண்டனர்.

இனி....

இராமபுத்திரன் கணினியை இயக்கியதும் கணினித் திரை ஒளிர்ந்தது. அங்கு படுக்கையில் படுத்திருக்கும் சுதனின் தோற்றம் தெரிந்தது. சுதனின் தோற்றத்தைக் கண்டதும் பிரியனும் அஷ்வினும் படபடப்புடன் பார்த்தார்கள். இராமபுத்திரன் செய்வதறியாது நின்ற அவர்களை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார். எனினும், அன்று, இரவு சுதன் பழைய நிலைக்குத் திரும்பினான். மீண்டும் சிறுவர்கள் மூவரும் ஒன்று கூடினார்கள். அவனுக்கு நேர்ந்த அனுபவம் பற்றி சுதன் விபரித்தான். தான் அறைக்குள் நுழைந்தது பற்றியும் அங்கு நேர்ந்தவை பற்றியும் படபடப்புடன் கூறினான்.

சுதன் சொல்வதைச் சிரத்தையுடன் கவனித்துக்கொண்டிருந்தார்கள் பிரியனும் அஷ்வினும். சிறிது நேரத்தில் இராமபுத்திரன் வந்து, ''பிள்ளைகளே! இன்னும் சில தினங்களில் எமது ஆராய்ச்சி ஆரம்பமாகவுள்ளது!'' என்றார். அதைக் கேட்ட மூவரும் திகைப்படைந்தனர். அவர்களின் தடுமாற்றத்தையும் முகப்போக்கையும் அதேநேரம் இவர்களிடம் இதுவரை காணப்பட்ட உற்சாகம் குறைந்துவிட்டதையும் இராமபுத்திரன் அவதானித்தார்.

'ஆய்வு கூடத்தில் எதையாவது இவர்கள் பார்த்திருப்பார்களோ! இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் கண்காணிப்பு இயந்திரம் எல்லாவற்றையும் பதிவு செய்திருக்கும். அதைப் பார்த்துவிட வேண்டியதுதான்' என்று இராமபுத்திரன் தீர்மானித்துக் கொண்டார்.

அவர் போனதன்பின் மூவரும் பேயறைந்தது போல இருந்தார்கள்.

''சுதன்! இப்போது என்ன செய்வது? ரோஜர் சொன்னமாதிரி ஆராய்ச்சி என்று கூறி எங்களை என்ன செய்யப் போகிறாங்களோ...!'' என்று கவலையுடன் கூறினான் பிரியன். மூவரும் சிந்தனையுடனேயே தூங்கச் சென்றார்கள்.

மறுநாள் இராமபுத்திரன் மலர்ந்த முகத்துடன், ''பிள்ளைகளே ஆயத்தமாகுங்கள்! இதுவரையில் நீங்கள் பார்க்காத ஒரு புதிய இடத்துக்குப் போகப் போகிறோம்'' என்றவாறு அவர்களை அழைத்துக் கொண்டு வெளியே சென்றார். சிறுவர்கள் மூவரும் பரபரப்போடும் சஞ்சலத்தோடும் அவர் பின்னாலேயே போனார்கள்.

அனைவரும் வெளியில் நின்ற புதிய ரக இயந்திர வாகனத்தில் ஏறினார்கள். அந்த வாகனம் இருந்த இடத்திலிருந்தே, விர்ரென உயர்ந்து பின் சமநிலையில் பறந்தது. சிறிது நேரத்தின் பின் சமதரை ஒன்றில் இறங்கி மெதுவாக நின்றது. அனைவரும் கீழே இறங்கினார்கள்.

எதிரே கூம்பு வடிவில் ஒரு கட்டடம். குழாய் வடிவில் நுழைவாயில், சல்லடைச் சுவர்கள், பளிங்குத் தரை, குறுகலான நடைபாதை..... நடந்து சென்று, கோளவடிவில் அறை ஒன்று வர நின்றார்கள். விசையொன்றை அழுத்தி கதவு திறக்க உள்ளே புகுந்தார்கள். அது உடைமாற்றும் அறைபோலத் தெரிந்தது. அதற்கான சாதனங்களும் காணப்பட்டன. நிறைய உடைகள் தொங்கின. மூவருக்கும் ஆடைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார் இராமபுத்திரன். அவை விண்வெளி வீரர்கள் அணியும் உடைகள் போன்று இருந்தன.



மூவருக்கும் வித்தியாசமான கண்ணாடிகளைக் கொடுத்துப் போட்டுக்கொள்ளச் சொன்னார்.

''தம்பிகளா! இந்தக் கண்ணாடிகள் சாதாரணமானவை அல்ல; இவை விண்வெளிப் பயணிகள் பயன்படுத்துபவை. இக்கண்ணாடிகளுக்கு இயங்கல் சக்தி உண்டு. பார்த்தல்,சமிக்ஞை செய்தல், ஆளிகளைத் திறத்தல், நூல் பக்கங்களைப் புரட்டல், தொலைக்காட்சியை இயக்கல் என பல காரியங்களைச் செய்வதற்கு இவை உதவும்'' என்றவாறு இராமபுத்திரனும் கண்ணாடியை அணிந்து கொண்டார்.

''இப்போது நாங்கள் செயற்கை விண்வெளிச் சூழலுக்குள் சஞ்சரிக்கப் போகிறோம். வானவெளியில் பயணிக்கும்போது, குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் புவியீர்ப்பு விசை குறைந்துவிடும். அதனால், பிராணவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்களை நாம் எடுத்துச் செல்லவேண்டும்! வாருங்கள் போகலாம்....'' என்று கூறியபடி வெளியே வந்த இராமபுத்திரன், விசைதூக்கி இருந்த இடம் நோக்கி நடந்தார். அனைவரும் ஏறிக்கொண்டதன் பின்னர் அந்த விசைதூக்கி (லிஃப்ட்) உயர எழும்பிச் செல்லும் என்றுதான் சிறுவர்கள் மூவரும் நினைத்தார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக அது பூமியை ஊடறுத்துக் கீழ் நோக்கிச் செல்ல அவர்கள் அச்சத்தால் வெடவெடத்துப் போனார்கள்.

(தொடரும்)

# இரக்கத்திற்குக் கிடைத்த பரிசு!

ராமு என்ற ஏழைச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் எப்போதும் விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடைவாசலில் நின்று, கண்ணாடிக் கதவிற்குள்ளிருக்கும் அழகான பந்துகளை ஆசையோடு பார்த்துக்கொண்டே இருப்பான். ஏனெனில், அவனுக்கு அந்தப் பந்தை வாங்கப் பணம் இல்லை. ஒருநாள் கடைக்காரனைக் கேட்டதற்கு அவன், ''அதன் ஒன்றின் விலை ஐம்பது ரூபாய்'' என்றான். ராமுவின் முகம் ஏமாற்றத்தால் வாடிவிட்டது.

ஒரு பெருமூச்சுடன், பந்தை மறுபடியும் பார்த்துவிட்டு ராமு நடந்தான்.



திடீரென்று ஒரு பரபரப்பான குரல், ''தம்பி, என் கைக் கடிகாரம் எங்கேயோ நழுவி விழுந்துவிட்டது. கொஞ்சம் தேடிப்பார். தேடித் தந்தால் உனக்கு ஐம்பது ரூபாய் தருகிறேன்'' என்று பரிதாபமாக ஒரு கிழவர் ராமுவை வேண்டினார்.

'ஐம்பது ரூபாயா!' ராமுவிற்கு உடனே அந்தக் கண்ணாடிப் பெட்டியில் இருந்த பளபளக்கும் பந்துதான் அவன்முன் காட்சியளித்தது.

''கடவுளே! கைக்கடிகாரம் என் கையில் கிடைக்கும்படி செய். எனக்கு ஐம்பது ரூபாய் கிடைக்கும். உடனே அந்தப் பந்தை வாங்கிவிடுவேன்'' என்று நினைத்தபடி வந்தவழியே திரும்பித் தேட ஆரம்பித்தான்.

தேடிக்கொண்டு வரும்போது, ராமுவின் கண்களில் வினோதமான ஒன்று தென்பட்டது. பரபரப்புடன் அதை நெருங்கிப் பார்த்தான். அது ஒரு சின்னக் குஞ்சுப் பறவை. புற் தரையில் விழுந்து கிடந்தது. இன்னும் இறக்கை முளைக்கவில்லை. தன் சின்னச் சிறகை ஆட்டி, ஆட்டி எழுந்திருக்க முயன்றது. தாய்ப் பறவை 'கீச்.... கீச்... என்று கத்தியபடி மேலும் கீழும் பறந்தபடி இருந்தது. ராமுவிற்குப் புரிந்துவிட்டது. 'பாவம், அதனால் தன் குஞ்சை மேலே கொண்டுபோக முடியவில்லை. தன்னைக் கண்டதும் உதவி கேட்டுத்தான் இப்படிக் கத்தி ஆரவாரம் செய்கிறது' என்று ராமு நினைத்தான். பறவையைக் கூட்டில் சேர்த்துவிடுவதுதான் நல்லது என்று தீர்மானித்தான்.

எனினும், இதை எடுத்துக்கொண்டு மரத்திலேறிக் கூட்டில்விட்டுக் கொண்டிருந்தால், என் கையில் கடிகாரமும் அகப்படாது. பந்தும் வாங்க முடியாது. பிறகு வந்து இப்பறவையைக் கவனிக்கலாம் என்று எண்ணி, கடிகாரத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஓர் அடி முன்னால் வைத்தான். திடீரென்று குஞ்சு கீச்சிட்டது. திரும்பிப் பார்த்த ராமு, குஞ்சு எழுந்திருக்க முயன்று மல்லாந்து விழுந்துவிட்டதைக் கண்டான். குஞ்சு தவிப்பதைக் கண்ட தாய்ப்பறவை கத்தியபடி குஞ்சை சுற்றிச் சுற்றிப் பறந்தது.

அந்தப் பரிதாபமான காட்சி ராமுவை உருக்கிவிட்டது. கீழே குனிந்து குஞ்சை மெதுவாகத் தூக்கினான். பஞ்சு போன்ற அதைக் கவனத்துடன் கையில் ஏந்தியபடி மரத்தில் ஏறினான். தாய்ப் பறவை ராமுவைச் சுற்றிச் சுற்றி சந்தோஷ ஆரவாரம் செய்தது. பச்சிளங்குஞ்சை அதன் கூட்டில் சேர்த்துவிட்டு மரத்திலிருந்து கீழே குதித்த ராமு, ''அம்மா' என்று அலறினான். கீழே குனிந்த ராமுவுக்கு அழுகைக்குப் பதில் ஆனந்தம்தான் உண்டாயிற்று. கால் வலியையும் மறந்தான். புல்லினிடையே பளிச்சிட்ட அப்பொருளை எடுத்துக்கொண்டு ஓட்டமாக ஓடினான். ராமுவின் காலில் குத்தியது என்ன தெரியுமா? கடிகாரம்.உடனே, தாத்தாவிடம் கடிகாரத்தைக் கொடுத்தபோது, தாத்தா அவனுக்கு ஐம்பது ரூபாய் பரிசாகக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு, பந்தை வாங்க சந்தோஷமாக கடையை நோக்கி ஓடினான் ராமு.

# உலகப் புகழ் நினைவுச் சின்னங்கள்

உலகில் மனிதனால் கட்டப்பட்ட ஏராளமான தனித்துவம் மிக்க நிர்மாணங்கள் உள்ளன. இவற்றுள் முன்னிலை வகிக்கக்கூடிய நிர்மாணங்கள் இன்றும் உலகப் புகழ் நினைவுச் சின்னங்களாக இருந்து வருகின்றன. வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவற்றுள் சில இங்கு வழங்கப்படுகின்றன

## ஐஃபல் கோபுரம்




பிரான்ஸ் புரட்சியின் ஞாபகார்த்த சின்னமாகும். எலக்சாண்டர் குஸ்டாஃப் ஐஃபள் என்ற பொறியியலாளரால் 'என்ஸ்பொஸிஷன் யுனிவேர்ஸல்' கட்டுமான கண்காட்சிக்கென பிரான்ஸ் நகரை அடையாளப் படுத்துமுகமாக இக்கோபுரம் நிர்மாணிக்கப் பட்டது.

## வெற்றி வளைவு




பிரான்ஸின் ஸ்டார் சதுக்கத்தில் மன்னன் நெப்போலியனின் வெற்றியின் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கிஸாவின் பெரிய பிரமிட்



எகிப்தின் தலைநகரான கெய்ரோவின் புறநகர் பகுதியில் கிஸா பீடபூமியில் இது அமைந்துள்ளது. மிஸ்ர் (இன்றைய எகிப்து) வாசிகளினால் நிர்மாணிக்கப்பட்ட இது, பண்டைய ஏழு உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. கிஸா பிரமிட்டினுள் எகிப்திய ஃபாரோக்களின் (மன்னர்களின்) உயிரற்ற உடல்கள் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

## லண்டன் நெல்சன் கோபுரம்




இங்கிலாந்தின் ட்ரஃபல்கார் சதுக்கத்தில், எட்மிரல் ஹொரேஷியோ நெல்சனின் ஞாபகார்த்தமாக இக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

## சீனப் பெருஞ்சுவர்



மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட மிக நீளமான நிர்மாணிப்பாக இது உள்ளது. க்விங்க் ஹங்க் என்ற பேரரசனின் தலைமையில் இதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிரிகளிடமிருந்து நாட்டைக் காப்பதற்காகவே இந்த பெருஞ்சுவர் அமைக்கப்பட்டது.

## லிபர்ட்டி சிலை



அமெரிக்காவின் லிபர்ட்டி தீவில் அமைக்கப்பட்டுள்ளது. பிரான்ஸினால் அமெரிக்காவிற்கு வழங்கப்பட்ட அன்பளிப்பாகும். பிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையிலான நட்புறவை உணர்த்துவதாக இச்சிலை அமைந்துள்ளது.

## ஸ்டோன்ஹென்ஜ் கற்தூண்கள்



புதிய கற்கால மற்றும் வெண்கலக் காலத்தைச் சேர்ந்த வரலாற்று நினைவுச் சின்னங்களுள் முக்கிய இடத்தை ஸ்டோன்ஹென்ஜ் கற்தூண்கள் வகிக்கின்றன. இங்கிலாந்தின் வில்ட்ஷயர் பிராந்தியத்தில் இக்கற்தூண்கள் காணப்படுகின்றன. இங்கு ஒவ்வொரு வடிவிலான கற்தூண்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது.



மீண்டும் அனர்த்தமொன்று ஏற்படுவதனைத் தவிர்த்தல், முன்னர் நிகழ்ந்த அனர்த்த நிலைமைகள் குறித்து தகவல் சேகரித்தல், மக்களை அறிவுறுத்தல், பாதுகாப்பு உபாயங்களைக் கடைப்பிடித்தல்.

மீண்டும் ஏற்படக்கூடிய அனர்த்தமொன்றை எதிர்கொள்ளக் கூடியவாறான கட்டடங்கள் மற்றும் பெருந்தெருக்களை நிர்மாணித்தல்.




அனர்த்த...
ஆபத்தினை...
உதாரணம்: மண...
வடிகால்க...
ஏற்படக் கூடிய...

*தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புயல்காற்று, மண்சரிவு, மின்னல் ஆகிய இயற்கை அனர்த்தங்கள் குறித்தும் அவற்றால் ஏற்படும் பாதிப் புக்கள் குறித்தும் ஊடகங்கள் வாயிலாகவும் ஏனைய வழிமுறைகளி னூடாகவும் நீங்கள் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.*

இடம்பெயர்ந்தவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல், கல்வி நடவடிக்கைகளை தொடரவும் அலுவலகப் பணிகளில் ஈடுபடவும் நடவடிக்கைகளை எடுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

அபாயங்களை...
விடுக்கும் பொறி...
பாதுகாப்பான...
வழிநடத்தல், முதலு...
என்பனவற்றை...

அனர்த்தத்தினை எதிர்கொண்டவர்களுக்கு முதலுதவி, உணவு, கூடாரங்கள், சுகாதார வசதிகள் என்பனவற்றை வழங்குதல்.

காலநிலை மாற்றத்தின் தீவிரத்தன்மையே இந்த நிலைமைகளுக்குக் காரண மாகும்.இத்தகைய இயற்கை அனர்த்தங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள நாம் எப்பொழுதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். இவ்வாறான அனர்த்தங்களில் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள பல்வேறு வழிமுறைகள் உள்ளன. முன்கூட்டியே அனர்த்த நிலைமைகளை அறிந்து கொள்வதில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல், இடமறிந்து செயற்படல் போன்ற விழிப்புணர்வுகள் அவற்றில் சிலவாகும்.

## முன்னறிவிப்பின்றி ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள்


முன்னறிவித்தல் இன்றியும் சில அனர்த்த நிலைமைகள் ஏற்படக் கூடும். அந்தவகையில் சுனாமி, பூமியதிர்ச்சி என்பன எதிர்பாராமல் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்களாயினும், வெள்ளம், வரட்சி, சூறாவளி என்பன குறித்து ஓரளவு முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும்.

## மனித செயற்பாடுகளினால் ஏற்படும் அனர்த்தங்கள்

இயற்கை மாற்றங்களினால் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதிப்பு ஏற்படுமிடத்து அதனை 'அனர்த்தம்' என்று குறிப்பிட முடியும். முறையற்ற மனித செயற்பாடுகளின் காரணமாகவே, பெரும்பாலான அனர்த்தங்கள் நிகழ்கின்றன.

## அனர்த்தத்தை வெற்றிகொள்ளலாம்

மலை அடிவாரத்தில் பாதுகாப்பற்ற வகையில் வீடுகளை அமைப்பதானது, மண்சரிவு அனர்த்தங்களுக்குள் சிக்க வழிவகுக்கும்.
அதேபோன்று, ஆற்றங்கரைகளில் பாதுகாப்பற்ற முறைகளில் வீடுகளை அமைப்பது பாரிய வெள்ளப்பெருக்கில் சிக்க வழிவகுக்கும். இவ்வாறே, மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும்போது, உயர்ந்த இடத்தில் அல்லது சமதரைப் பகுதிகளில் தரித்திருத்தல், மின்சாதனங்களை கையாளல் என்பன மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு வழிவகுக்கும். இவ்வாறான இயற்கைப் பாதிப்புகளிலிருந்து விலகி இருப்பதனால் அனர்த்தங்களைத் வெற்றிகொள்ள முடியும்.



## அனர்த்தங்களை வெற்றிகொள்வதற்கான 'அனர்த்த முகாமைத்துவம்'

இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அபாய நிலையைக் குறைத்துக்கொள்ள அனைவராலும் முடியும். அதேபோன்று, அனர்த்தம் நிகழும் சந்தர்ப்பத்திலும் அனர்த்தம் நிகழ்ந்த பின்னும் ஏற்படக்கூடிய உயிர்-உடமை இழப்புகளைக் குறைத்துக்கொள்ளவும் எம்மால் முடியும். ஓர் அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னரும் பின்னரும் அனர்த்த நிலைமைகளைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தலே 'அனர்த்த முகாமைத்துவம்' எனப்படுகின்றது.

## சுத்தம், சுகாதாரம் பேணுவது ஒவ்வொருவரதும் கடமையாகும்

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வேகமான காற்று போன்ற அனர்த்தங்களின்போது, சூழல் மாசடைகின்றது. உயிர்-உடமைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால், சிலர் வீடுகளை இழந்து இடம்பெயரும் நிலைமைகளையும் எதிர்கொள்வர். இவ்வாறு இடம்பெயர்வோர் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், முகாம்கள் போன்ற பொது இடங்களில் கூட்டாகத் தங்க வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களுக்குத் தேவையான முதலுதவிகள், உணவுகள், உடைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளைச் செய்துகொடுக்கும் பணிகளில் அரசாங்கத்துடன் இணைந்து தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள், சமூக நலக்குழுக்கள் ஈடுபடுவதைக் காணலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சுகாதார நடவடிக்கைகள் குறித்து அனைவரும் பொறுப்புடன் செயற்படுதல் அவசியமாகும்.

அம்மைத் தொற்றுகள்,வயிற்றோட்டம், சொறி சிரங்குகள் போன்ற தொற்று நோய்கள் மிக விரைவாக இடம்பெயர்ந்தோர் மத்தியில் பரவக்கூடும். எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களில் கொதித்தாறிய நீரை அருந்துதல், உணவை சுத்தமாகத் தயாரித்தல், சுகாதார வசதிகளை சரியான முறையில் கையாளுதல் என்பன குறித்து ஒவ்வொருவரும் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அதேபோன்று, இடத்திற்கு ஏற்றவாறும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் விதத்திலும் செயற்படுதல் வேண்டும். இடம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கை இயல்பு





# யற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவோம்!

**ங்களின்போது, ஏற்படக்கூடிய க் குறைக்க நடவடிக்கை எடுத்தல். ழை நீர் நன்கு வழிந்தோடக்கூடியவாறு ளை சுத்தம் செய்தல், மண்சரிவு பகுதிகளில் பாதிப்புகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல்.**

நிலைக்குத் திரும்பும் வரை தேவையான உதவிகள், நடவடிக்கைகளை எடுத்தல் அவசியமாகும்.

## சில இயற்கை அனர்த்தங்களும் பாதுகாத்துக்கொள்வதற்கான வழிமுறைகளும்

### * வெள்ளப்பெருக்கு

ஆறு கரை புரள்தல், மழைநீர் சரியான முறையில் வழிந்தோடாமை, நீரேந்துப் பகுதியில் ஏற்படும் அணை வெடிப்பு அல்லது

**ள அறிவிக்கும்-எச்சரிக்கை முறையினை அமுல் செய்தல், இடத்தை நோக்கி மக்களை உதவிகள், உணவுக் கூடாரங்கள் ற தயாராக வைத்திருத்தல்.**

உடைப்பு போன்ற காரணங்களினால் வெள்ள அனர்த்த நிலைமைகள் ஏற்படலாம்.

### வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாத்துக்கொள்ள...

வெள்ள அபாயம் தென்பட்டால், துரிதகதியில் பாதுகாப்பான இடத்தை நோக்கிச் சென்று விடுங்கள். அது மேட்டுப்பகுதியாவோ அல்லது உயரமான கட்டடமாகவோ இருக்கலாம். அவ்வாறு பாதுகாப்பான இடத்தினை நோக்கி செல்லும் போது கல்விச்சான்றிதழ்கள் மற்றும் இதர முக்கியமான ஆவணங்கள், தங்க ஆபரணங்கள், பணம், வங்கிப் புத்தகங்கள் என்பனவற்றை எடுத்துச்செல்ல மறவாதீர்கள். அவசர நேரத்தில் பயன்படுத்துவதற்காக மருந்து, குடிநீர் போத்தல், உலர் உணவு, போர்வை, பற்றரியில் இயங்கும் சிறிய ரேடியோ (அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய அறிவுப்புக்களை அறிந்துகொள்வதற்கு) என்பனவற்றை தயாராக வைத்திருங்கள்.

வெள்ளத்தின்போது, ஆற்றில் நீச்சல் அடித்தல், நீர் சார்ந்த விளையாட்டுகளில் ஈடுபடல், உடைந்து விழுந்திருக்கும் மின்கம்பங்களின் அருகில் செல்லல், வெள்ள அபாயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நடமாடுதல், வெள்ள நீரினால் மூடப்பட்டிருக்கும் கிணறுகள் மற்றும் ஆழமான குழிகள் உள்ள பகுதிகளுக்குச் செல்லல் என்பனவற்றை தவிர்த்துவிடுங்கள். வெள்ளநீர் வீட்டிற்குள் புகுந்தால் வீட்டின் கதவு, ஜன்னல்களைத் திறந்துவிடுவதுடன், மின் விநியோகத்தையும் துண்டித்து விடுங்கள்.

### * மண்சரிவு

உயர்ந்த பகுதியில் உள்ள கற்கள், மண், என்பன சரிந்து கீழ் நோக்கி வருவதை 'மண் சரிவு' என்பர்.

### மண்சரிவிலிருந்து பாதுகாப்புப் பெற....

வீடுகள் மற்றும் கட்டடங்களின் சுவர்களில் வெடிப்பு ஏற்படல், திடீரென நீரூற்றுகள் தோன்றுதல், மலை அடிவாரப்பகுதிகளில் நீர் ஊற்றுகளில் சேற்று நீர் கலத்தல், சரிவான பகுதிகளில் உள்ள மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் வளைதல், தரையில் வெடிப்புகள், மலைச் சரிவுப் பகுதிகளில் உள்ள மரங்கள் வாடுதல் என்பன மண்சரிவுக்கான அறிகுறிகளாகும். இவ்வாறான பௌதிக மற்றும் சுற்றாடல் மாற்றங்கள் தென்பட்டால் அவ்விடங்களில் இருந்து உடனடியாகவே வெளியேறிவிட வேண்டும்.

மண்சரிவுக்குள்ளான இடத்தை பார்வையிடவோ அல்லது அப்பகுதிகளில் பயணிக்கவோ முயற்சிக்க வேண்டாம். மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகள் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வீடுகளை அமைப்பதனை முற்றாகத் தவிர்த்துவிடுங்கள். அவ்வாறான பகுதிகளில் குடியேறுவதனையும் தவிருங்கள்.

### * சூறாவளி

சுற்றாடலில் வெப்பநிலை அதிகரிக்கும்போது, சுற்றுப்புறப் பகுதியின் காற்று வெப்பமடைந்து குறைவான காற்றழுத்த நிலை உருவாகின்றது. இதனால், உயர் அழுத்த வலயங்களில் இருந்து தாழ்வுப்பகுதியினை நோக்கி காற்று வீசுகின்றது. இந்த நிலைமை குறைவான காற்றழுத்த நிலையாகவும் மாறக்கூடும். இதனால், புயற்காற்று, சூறாவளி என்பன ஏற்படக் கூடும்.

### சூறாவளியிலிருந்து பாதுகாத்துக்கொள்ள...

வீடுகளுக்கு அருகாமையில் உள்ள பாதுகாப்பற்ற மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். வீடுகளின் கூரைகளைப் பலம் வாய்ந்ததாக அமைத்தல் வேண்டும். பாதுகாப்பற்ற மதில்கள், சுவர்கள் என்பனவற்றை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். பலமான காற்று வீசும்போது ஜன்னல் மற்றும் கதவுகள் அருகில் நிற்பதையும் மரங்களின் கீழும் மின்கம்பங்களின் அருகாமையிலும் நிற்பதனைத் தவிர்க்க வேண்டும்.

### * மின்னல்

பருவப் பெயர்ச்சி மழைக் காலத்தில் மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும். எனினும், மின்னல் தாக்கத்திலிருந்து இலகுவாக விடுபட முடியும்.

### மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற...

மின்னல் தாக்கம் உள்ளபோது, உயர்வான இடத்திலும் வெட்ட வெளியிலும் இருப்பதனைத் தவிருங்கள். தனித்துள்ள மரத்தின்கீழ் நிற்பதனைத் தவிருங்கள். உலோக உபகரணங்கள் மற்றும் மின் சாதனங்களின் பயன்பாட்டை நிறுத்தி விடுங்கள். தொலைபேசிப் பாவனையைத் தவிருங்கள். படகில் அல்லது வெற்றுத்தரையில் இருக்கும்போது சாய்ந்திருங்கள்.

**பிரியா**

## மழை நின்றதும் தலைதூக்கும் 'டெங்கு'

மழைக்காலம் முடிவடைவதை அடுத்து ஏற்படும் நுளம்புப் பெருக்கம் காரணமாக, தலைதூக்கக்கூடிய ஓர் ஆட்கொல்லி நோயாக டெங்கு காணப்படுகின்றது. இதன் பரவலைத் தடுப்பதற்கு யோகட் கோப்பைகள், தேங்காய்ச் சிரட்டைகள், ப்ளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடிப் போத்தல்கள் போன்றவற்றில் மழைநீர் தேங்கி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான சூழல் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

மழைக் காலங்களில் வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்து கூடிய கவனம் செலுத்தி, அவற்றை சுத்தமாக வைத்திருப்பதுடன், நுளம்புக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான ஏனைய வழிமுறைகளையும் நாடவேண்டும். இவ்வாறான நடைமுறைகளினால் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.




## வினாத்தாள் - I

பெயர்: ..................................................   நேரம்: 45 நிமிடங்கள்


★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக

01) உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டைச் சரியாக வெட்டவேண்டிய விதத்தை தெரிவுசெய்க.



1.   2.   3.   4.


02) இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்க.



A   B   C   D

1. CD AB   2. BC AD   3. BD AC   4. AB CD


03)




1. AC BD   2. AD BC   3. CD AB   4. AB CD

★ பின்வரும் உருவங்களின் கோலங்களிற்கு ஏற்ப, அடுத்து வரும் உருவத்தைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.

04)






1.   2.   3.   4.


05)





1.   2.   3.   4.

★ கடையொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த வர்ணப் பந்துகளின் விபரம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. இதை கவனத்தில் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




06) கடையிலுள்ள தனிநிறத்திலான பந்துகளின் எண்ணிக்கை யாது?

1. 23   2. 24   3. 17   4. 15

07) பச்சையும் மஞ்சளும் கலந்த நிறத்திலான பந்துகளின் எண்ணிக்கை யாது?

1. 4   2. 2   3. 3   4. 9

08) மூன்று நிறங்களும் கலந்த பந்துகள் எத்தனை?

1. 4   2. 3   3. 2   4. 10




09) இரண்டு நிறங்களை மட்டும் கொண்ட பந்துகளின் எண்ணிக்கை யாது?

1. 10   2. 9   3. 14   4. 15

10) குறிப்பிட்ட தூரத்தைக் காரில் சென்று வர எடுக்கும் நேரம் 4 மணித்தியாலம் ஆகும். அதே தூரத்தினை சைக்கிளில் சென்றுவர எடுக்கும் நேரம் 5 மணி 30 நிமிடங்களாகும். எனின், சைக்கிளில் சென்றுவர எடுக்கும் மேலதிக நேரம் எவ்வளவு?

1. 1.30 மணி   2. 1.00 மணி
3. 9.30 மணி   4. 5.30 மணி

11) XX-IX = ☐

1. XV   2. XI   3. XVI   4. XIII


12) 120 இன் அரைவாசியின் $\frac{1}{4}$ உடன் 10 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?

1. 30   2. 25   3. 60   4. 15

13) தரப்பட்டுள்ள எண்கோலத்தை விளங்கி வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணை தெரிவுசெய்க. (1,5,3,10,—,15, 7,—9,)

1. 4,20   2. 5, 15   3. 6, 10   4. 5, 20

★ 14 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு அருகிலுள்ள உருவில் இருந்து விடை காண்க.



14) நிழற்றப்படாத கட்டங்களின் மொத்தப் பரப்பளவு எத்தனை கட்டங்கள்?

1. 9   2. 8   3. 7   4. 10


15) நிழற்றப்பட்ட கட்டங்களின் மொத்தப் பரப்பளவு யாது?

1. 9 கட்டங்கள்   2. 7 கட்டங்கள்
3. 8 கட்டங்கள்   4. 10 கட்டங்கள்

16) பிற்பகல் 5.35 மணியைச் சரியாகக் கூறும் முறை;

1. ஐந்து கழிந்து முப்பத்தைந்து நிமிடம்
2. பிற்பகல் இருபது கழிந்து ஐந்து மணி
3. பிற்பகல் ஆறிற்கு இருபத்தைந்து நிமிடம்
4. பதினேழு முப்பத்தைந்து

17) சிறுவன் ஒருவன் படத்தில் காட்டப்பட்டவாறு தராசு ஒன்றில் படிகளை வைத்துள்ளான். தராசு சமநிலையை அடைய வேண்டு மெனின், B பக்கம் வைக்க மேலும் தேவையான படியின் நிறை யாது?




1. 1000g   2. 500g   3. 1500g   4. 2500g

18) $\frac{3}{4} + \frac{3}{8}$ சுருக்கினால் வரும் விடை யாது?

1. $1\frac{1}{8}$   2. $\frac{3}{8}$   3. $\frac{3}{4}$   4. $\frac{2}{8}$

19) 2600 கிராமில் $\frac{1}{4}$ பங்கைத் தருக.

1. 650g   2. 100g   3. 250g   4. 600g

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

# ஒதுக்கப்பட்ட நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துங்கள்





வாழ்க்கையில் பெரும்பாலான விடயங்கள் நேரத்தையும் காலத்தையும் மையப்படுத்தியே செயற்படுகின்றன. அதிலும் சில விடயங்களை அதற்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்தில்தான் செய்து முடிக்க வேண்டும். இதன்போது, ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு என்பதைவிட, ஒதுக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிட்ட விடயத்தை எவ்வாறு வினைத்திறனுடன் செய்து முடிக்கலாம் என்பது குறித்து மட்டுமே எமது எண்ணம் இருக்க வேண்டும்.



அந்தவகையில், 'கற்றல்' என்பதும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் இடம்பெற வேண்டியதாகவே காணப்படுகின்றது. அதாவது, கற்றலுக்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்திலும் காலப் பகுதியிலும்தான் கற்றல் நடவடிக்கை இடம்பெற வேண்டும் என்பதோடு, அந்தக் கல்வியானது, பிரயோகிக்க வேண்டிய நேரத்தில் பயன்படக்கூடியதாகவும் அமைய வேண்டும். எனவே, மாணவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் குறியாக இருந்து, அக்காலப்பகுதிக்குள் கற்றல் நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களைப் பொறுத்த வரையில், பரீட்சைக்காலங்களில் இந்த நேர ஒதுக்கீடு குறித்து பிரதானமாக கவனத்தில்கொள்ள வேண்டி இருக்கின்றது. பரீட்சையில் ஒரு வினாவுக்கு விடை எழுதும் முன் அவ்வினாவை நன்கு விளங்கி வாசித்தே விடையை எழுத வேண்டும். சிலவேளைகளில் வினாவை மீண்டும் வாசிக்கும்போது ஏற்கனவே எழுதிய விடை பிழையாகவும் இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், விடையை மீண்டும் எழுதமுற்படும்போது, அங்கு குறித்த வினாத்தாளுக்கென ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்திருக்கும். இதனால், தடுமாற்றங்களுக்கு உட்பட வேண்டியும் ஏற்படும். எனவே, பரீட்சைகளின்போது ஒதுக்கப்பட்ட நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்திக்கொள்ள மாணவர்கள் தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

கற்றலுக்கான பயிற்சிகள், ஒழுங்குகள், ஆயத்தப்படுத்தல் போன்றன அனைத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் வகைப்படுத்தி சரியாக செய்து முடிக்க வேண்டும். ஒதுக்கப்பட்ட நேரத்தில், ஒதுக்கப்பட்ட வேலையை செய்தல் என்பது சரியான முறையில் நடந்தால், எதிர்காலத்தில் அது வாழ்க்கையில் மட்டும் அன்றி, எமது தொழில்களிலும் செல்வாக்குச் செலுத்தும். இதனால், எந்தவித வேலையாக இருப்பினும் அவற்றை செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். ஆகவே, ஒதுக்கப்பட்ட நேரத்தை சிறப்பாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்துங்கள். இதில்தான் மாணவரின் உயர்வு தங்கியுள்ளது.

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

# விண்வெளி செல்லவுள்ள 'பீம்'

பிகெலோ திட்டம் குறிந்து பிகெலோ ஏரோஸ்பேஸ் தலைவர் ரொபர்ட் டி.பிகெலோ மற்றும் நாஸா பிரதி நிர்வாகி லோரி காவர் ஆகியோர் தெளிவுபடுத்தும்போது...



ஓவியரின் கைவண்ணத்தில்' பீம்'



அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனமும் பிகெலோ ஏரோஸ்பேஸ் என்னும் தனியார் நிறுவனமும் இணைந்து விண்வெளியில் செலுத்த இருக்கும் விண்வெளித் தொகுதிக்கு (Space Module) 'பீம்' (Bigelow Expandable Activity Module- BEAM) என்று பெயர் வைத்திருக்கின்றனர். சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஓர் அங்கமாகவே இந்த தொகுதி பொருத்தப்படவுள்ளது.

'பீம்' விண்வெளித் தொகுதியானது, பல்வேறு சிறப்புக்களைத் தன்னகம் கொண்டுள்ளது. இதுவரை சர்வதேச விண்வெளி நிலையத்துடன் பொருத்தப்பட்டுள்ள ஏனைய விண்வெளித் தொகுதிகளை விட, பீம் விண்வெளித் தொகுதி அளவில் பெரியதாக இருக்கின்றது. எடை குறைந்த மூலப்பொருட்களால் அது வடிவமைக்கப்பட்டிருப்பதனால், ஏனைய தொகுதிகளைவிட அதன் எடையும் குறைவாக இருக்கின்றது. அத்துடன், பீம் விண்வெளித் தொகுதி விரிவாக்கம் செய்யக்கூடியதாகவும் உள்ளது. அவ்வாறு விரிவாக்கம் செய்வதனூடாக, அதிக இடவசதியையும் பல அறைகளையும் அங்கு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக, விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகச் செல்லும் விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே தங்கியிருப்பார்கள். இன்னும் சிலகாலங்களில் அதனுடன் பீம் இணைய இருப்பதால், மேலும் அதிகளவு விண்வெளி வீரர்கள் இங்கு தங்கியிருந்து, ஆராய்ச்சிகளைச் செய்யமுடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், 'பீம்' விண்வெளித் தொகுதியைப் போன்ற எடை குறைந்த தொகுதிகள் அனுப்பப்பட்டு, சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டுவிட்டால், விண்வெளிச் சுற்றுலாப் பயணிகளைக்கூட அங்கு அழைத்துச்சென்று தங்க வைக்கலாம் என்றும் நாஸா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமியைப் போன்ற இரண்டு கிரகங்கள், பூமியிலிருந்து 1,200 ஒளி ஆண்டுகள் தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாக தெரியவந்துள்ளது. 'கெப்லர் 62 - e' மற்றும் 'கெப்லர் 62-f' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவற்றில் பாறைகள், கடல்கள் மற்றும் ஈரத் தன்மையுள்ள காற்று போன்றவை இருப்பதும் தெரியவந்துள்ளது.

# பூமியைப் போன்ற இரண்டு கிரகங்கள்




விண்வெளி குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள நாஸாவினால் கெப்லர் 62 விண்கலம் அனுப்பப்பட்டது. அதில் பொருத்தப்பட்டுள்ள அதிசக்தி வாய்ந்த தொலைக்காட்டி படம்பிடித்து அனுப்பி இருக்கும் புகைப்படங்களை ஆராய்ந்ததை அடுத்தே, பூமியைப் போன்று மேலும் இரண்டு கிரகங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கிரகங்களுக்கும் அந்த இரண்டு கிரகங்களிலும் நீர் இருப்பது தெளிவாகத் தெரிகிறது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆகவே, இவை மனிதர்கள் உயிர் வாழ முற்றிலும் தகுதியானவை என்ற முடிவுக்கு விண்வெளி ஆய்வாளர்கள் வந்துள்ளனர்.

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5140
முஹம்மது நவீத், றஹ்மானியா வீதி, கிண்ணியா-01.


அங். இல: 5141
முஹம்மத் ஸாமித், அக்குறணை வீதி, தொடங்கொல்ல.


அங். இல: 5142
எம்.சாருக்கான், புளத்சிங்கள, முல்லக்கந்த.


அங். இல: 5143
எம்.அஸ்பாக், ஐ.எஸ்.எஸ்.வீதி, அக்குறணை.


அங். இல: 5144
சாம் ஸ்டென்லி, தியனிலகல பஸார், லிந்துலை.


அங். இல: 5145
வி.சரண்ஜன், 2 ஆம் வட்டாரம், முள்ளியவளை.


அங். இல: 5146
ஏ.எம்.முஆத், பெதியாகொட, கெலிஓயா.


அங். இல: 5147
முஹம்மத் ஃபாதில், மாரவில வீதி, நாத்தாண்டியா-10.


அங். இல: 5148
மா.சகாணுதன், நடராஜானந்தா வீதி, நாவற்குடா.


அங். இல: 5149
எஸ்.சுதாகரன், ஹோட்டன் தோட்டம், கலவான.


அங். இல: 5150
ப.றஜிதன், யாழ் வீதி, ஓமந்தை.


அங். இல: 5151
பொ.உதயகுமார், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

# களவாடுதல் (Stealing)



பாடசாலை மாணவர்களால் இழைக்கப்படும் குற்றங்களில் களவாடுதல் பெருமளவில் காணப் படுகின்றது. இக்குற்றத்தை செய்ப வர்களில் சிறுமியரைக் காட்டிலும் சிறுவர்களே அதிக எண்ணிக்கை யில் காணப்படுகின்றனர் என்பதை புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுமார் மூன்று வயது வரை, சிறு குழந்தைகளுக்கு தன்னைப் பிறரிடமிருந்து பிரித்து நோக்கும் திறன் இருப்பதில்லை. ஆகையால், 'பிறரது உடமைகளை அவர்களது அனுமதியின்றி எடுப்பது தவறு' என்ற உணர்வு சிறு குழந்தைகளிடம் இருக்கும் என்று கருதமுடியாது. ஆனால், காலம் செல்லச் செல்ல பெற்றோரின் நல்லுரைகள் மற்றும் எடுத்துக்காட்டு தல்கள் மூலம் பிறரது பொருட்களை எடுப்பது தவறு என்ற உணர்வைக் குழந்தை பெறுகின்றது. ஆனால், பாடசாலைக்குச் சேர்ந்த பின்னரும் ஒரு சில குழந்தைகள் களவாடுவதை அவதானிக்கலாம். இச் செயலினை குழந்தையானது, தனது சூழ்நிலை யின் செல்வாக்கினால் பெறுகின்றது. இத்தகைய களவுச் செயல்களில் ஒரு மாணவன் தொடர்ந்து ஈடுபடுவதற்கு பல காரணங்கள் இருக்கக்கூடும்.





- பிள்ளைகளுக்கு நல்லொ ழுக்கப் பயிற்சியளிக்காமை
- குழந்தையிடம் அளவுக்கு அதிகமாகப் பெற்றோர் அன்பு காட்டல்
- வீட்டில் மிகக் கடுமை யான கட்டுப்பாடுகள்
- குழந்தைகளின் அடிப்ப டைத் தேவைகளை பெற்றோர்கள் புறக்கணித்தல்

இவையாவும் ஒரு மாணவ னைத் களவாடத்தூண்டும் காரணி களாகும். களவாடும் மாணவர் களை திருத்த முற்படும் ஆசிரியர், இதன் அடிப்ப டைக் காரணங் களைக் கண்டறிந்து அவற்றை நீக்க முயற் சிப்பது சிறந்த வழிமுறை யாக அமையும்.

(தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலை வாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங் களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்ட வாறு செயற்படுத்தவும்.




படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

பாடசாலை: ..........................................

வகுப்பு: ..........................................


திகதி: ..........................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

# தெரிந்து கொள்வோம்

- மையோஃபியா (Myopia) என்றால் எதனைக் குறிக்கின்றது?



கண் பார்வைக் குறைபாடுடைய அல்லது கோளாறு உள்ளவர்களது 'கிட்டப்பார்வை' குறைபாடு 'மையோஃபியா' என அழைக்கப்படுகின்றது.

- அச்சு இயந்திரத் தைக் கண்டுபிடித் தவர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?



ஜேர்மனியைச் சேர்ந்த ஜொஹன் ஸ் கூட்டக்பேர்க் என்பவர், 1447இல் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

- எரிபொருட் களுள் மிகவும் விரைவாக தீப்பற்றக்கூடிய எரிபொருள் எது?



பெற்றோல்

- டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு இன்னிங் ஸில் ஆகக்கூடிய ஓட்டங்களைப் பெற்ற விளை யாட்டு வீரர் யார்?



பிரயன் லாரா - மே.இ.தீவுகள்

- சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனம் ஐக்கிய நாடுகள் சபையில் உருவாக்கப்பட்டது. 'அம்னெஸ்டி' மனித உரிமை அமைப்பு யாரால், எப்போது உருவாக்கப்பட்டது?

பிரித்தானியாவில் 1961 ஆம் ஆண்டு பீற்றர் பெனென்சன் என்பவரால் உருவாக்கப்பட்டது.

- கூட்டாட்சி (சமஷ்டி) ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய நாடு எது?

கெனடா

- மனித உடலில் 206 எலும்புகள் காணப்படுகின் றன. அதில் விலா எலும்புகள் 24 ஆகும். முள்ளந் தண்டு எலும்பு கள் எத்தனை?



33 எலும்புகள்

- 1526 இல் இந்தியாவில் மொகலாய மன்னர்க ளின் ஆட்சி ஏற்பட வழிவகுத்த யுத்தம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?




'பனிபட்' யுத்தம்

**தொகுப்பு:- உடுவை பரந்தாமன்**


# கண் வலியைத் தருகிறதா MS Word?




MS Word மென்பொருளை நீண்டநேரம் பயன்படுத்துபவர்கள் தங்கள் கண்களில் வலியையோ அல்லது தங்கள் பார்வைப்புலனில் மாற்றம் இருப்பதையோ உணரக்கூடும். இதற்குக் காரணம், MS Word இனைப் பயன்படுத்துபவர்களில் பெரும்பான்மையானவர்கள், பிரகாசமான வெள்ளைப் பின்னணியில், சிறிய அளவுகளில் கறுப்பு எழுத்துக்களைத் தொடர்ச்சியாகப் பார்ப்பதுதான் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.




(படம் - 1)




(படம் - 2)

இந்தக் கண் வலியை, அல்லது பார்வையில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு MS Word மென்பொருளில் மாற்று வழிகள் உள்ளன. அவற்றில் முக்கியமான வழிமுறையாக, பின்னணி மற்றும் எழுத்துக்களின் நிறத்தை மாற்றி வைத்து இயக்கும் வழிமுறை அமைந்துள்ளது. இந்த வழிமுறைக்கமைய, MS Word கோப்புக்கள், பக்கங்களின் நிறங்களை தனித்தனியே மாற்றமுடியும் என்பதோடு, அனைத்து கோப்புக்களை ஒட்டுமொத்தமாக மாற்றவும் முடியும். தவிர, புதிதாகத் திறக்கும் MS Word கோப்பினையும் மாற்றி வழங்கக்கூடிய வழிமுறை ஒன்றும் உள்ளது.

இதனைப் பரிசோதித்துப் பார்க்க....


* Microsoft Word கோப்பு ஒன்றைத் திறந்துகொள்ளுங்கள். பின்னர் Tools மெனுவில் க்ளிக் செய்து, தெரியும் மெனுவில் Options என்னும் பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். (படம் - 1)

* அதில் வரும் Dropdown மெனுவில் General ஐத் தெரிவுசெய்யுங்கள். (படம் -2)


* அங்கே பல தெரிவுகள் இருக்கும். அவற்றில், 'Blue background, white text' என்று இருப்பதற்கு முன்னால் உள்ள Check Box இல், க்ளிக் செய்து (tick செய்து) அதனைச் செயற்படுத்திவிடுங்கள். (படம்- 3)

* அதன் பின்னர் Ok யைக் க்ளிக் செய்து வெளியேறுங்கள். இப்போது நீங்கள் திறந்துவைத்திருந்த கோப்பு நீல நிறப் பின்னணியில் வெள்ளை எழுத்துக்களுடன் தெரியும். (படம் - 4)

இனி எந்தவொரு Microsoft Word கோப்பினைத் திறந்தாலும் அது நீல நிறப் பின்னணியில் வெள்ளை எழுத்துக்களோடு இருக்கும். தேவையில்லையெனில் முன்பு இருந்ததுபோல மாற்றிக்கொள்ளலாம்.




(படம் - 3)



(படம் - 4)

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, மே மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்

2013, மே, 22, புதன்கிழமை

# குறுந்தகவல்மூலம் வீட்டுக்கதவைத் தாழிடலாம்- திறக்கலாம்!

Lockitron எனும் புதிய தொழில்நுட்பத்தைக்கொண்டு ஸ்மார்ட்ஃபோனிலிருந்து ஒரு குறுந்தகவலை (sms/command) அனுப்புவதன் மூலம், உலகின் எந்த மூலையிலிருந்தும் தமது வீட்டினது கதவினைத் தாழிடவும் திறந்துகொள்ளவும் ஒருவரால் முடியும் என்பது ஆச்சரியம் தரும் ஒரு விடயம்!

இந்த நுட்பத்தினை நினைத்துப் பார்க்கக்கூடிய விடயங்களையெல்லாம் அதிநவீன தொழில்நுட்பமானது, சாத்தியமாக்கிக்கொண்டு வருகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.



இந்த நவீன பூட்டினை நாம் கதவுகளில் இலகுவாகப் பொருத்தவும் கழற்றிக்கொள்ளவும் முடியும். அத்துடன், உங்களைத் தவிர, உங்கள் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் தங்கள் மொபைல்மூலமோ அல்லது திறப்பினாலோ உங்கள் வீட்டுக்கதவைத் திறந்தாலும் உங்கள் தொலைபேசிக்கு உடனடியாக அது குறித்து செய்தி அனுப்பப்படும்.






அமெரிக்காவின் Apigy inc எனும் நிறுவனம் வடிவமைத்துள்ளது. லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப கண்காட்சியான CES-Consumer Electronics Show இலேயே இது அறிமுகப்படுத்தப்பட்டது. நாம் கற்பனையில் மட்டுமே




இந்த Lockitron தொழில்நுட்பமானது, எந்தவொரு ஸ்மார்ட்ஃபோனிலும் செயற்படும் என்பதால், இதற்கான வரவேற்பு அபரிமிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பூட்டினை வாங்கிக்கொள்வதற்கு இப்பொழுதே 15,000 பேர் முன்பதிவு செய்திருக்கிறார்களாம்!

# கணினியின் பாதுகாப்பு நிலை குறித்து பட்டியலிட்டுக் காட்டும் 'OPSWAT'







வேகமாக முன்னேறி வரும் தொழில்நுட்ப மாற்றங்களோடு, அந்த நுட்பங்களை நோக்கி வரும் சைபர் தாக்குதல்களின் வீரியமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதற்கெல்லாம் ஈடுகொடுக்கும் வகையில் எமது கணினியின் பாதுகாப்பைப் பேணுவது முக்கியமானதொரு விடயமாக இருக்கின்றது.

ஏனெனில், கணினிகளை வைரஸ்கொண்டு தாக்குதல், ட்ரோஜன் ஹோர்ஸ் போன்ற ஊடுருவிகளை அனுப்பி தகவல்களைத் திருடுதல், கணினிகளைக் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் போன்ற சட்டவிரோத செயல்கள் அன்றாடம் நடைபெறுவது வழக்கமாகிவிட்டது.

ஆக, நாம் விடும் சிறு கவனக்குறைவே இத்தகைய பாதிப்புக் களுக்கு எமது கணினியை உள்ளாக்கிவிடுகிறது. இதனால், முக்கியமான இணையக் கணக்குகளின் கடவுச்சொற்கள், கடன் அட்டை இலக்கங்கள், தொலைபேசி இலக்கங்கள் போன்றன திருடப்படுவதோடு, எமது கணினிகளிலுள்ள முக்கிய தகவல்களை இழக்கவும் நேரிடுகின்றது.

அதற்கமைய, எம்மை அறியாமல் நாம் செய்யும் இத்தகைய கவனயீனப் பிழைகளினால் வரும் பாதிப்புக்களை மட்டுப்படுத்தக்கூடிய மென்பொருள் ஒன்று பாவனைக்கு வந்துள்ளது. 'OPSWAT' எனப்படும் இந்த மென்பொருள், எமது கணினி எந்த அளவு பாதுகாப்பாக இருக்கின்றது என்பதனைக் கணக்குப்போட்டுக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாமல், எமது கணினியின் பாதுகாப்பு நிலையில் பலவீனமாக இருக்கும் அம்சங்களையும் துல்லியமாகக் காட்டுவதுடன், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தருகின்றது.

antivirus, antiphishing, backup, patch management, firewall, public file sharing, hard disk encryption மற்றும் மூன்றாம் நபர் மென்பொருள் தொடர்பில் சிறந்த முடிவுகளையும் தீர்வையும் தரும் இந்த மென்பொருளைக் கணினியில் நிறுவவேண்டிய அவசியம் இல்லை என்பதுடன், இதனை இலவசமாக தரவிறக்கிக்கொள்ளவும் முடியும். http://www.opswat.com/products/security-score என்ற இணையத்தள இணைப்புக்குச் சென்றால் இதனை இலவசமாகத் தரவிறக்கிக்கொள்ள முடியும்.





# Micromax இன் கலக்கல் வெளியீடு:

# A115 Canvas 3D



Micromax நிறுவனத்தின் கலக்கலான வெளியீடுகளில் ஒன்றுதான் 'A115 Canvas 3D' கையடக்கத் தொலைபேசி. தற்போத எவில் குறைந்த விலையில் 3D வசதி உள்ள கையடக்கத் தொலைபேசியாக இதுதான் உள்ளது எனும் செய்தி இதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கிறது. இதிலுள்ள 3D வசதியினால் வீடியோ மற்றும் Photo களை 3D Effect உடன் பார்க்கலாம் என்று Micromax நிறுவனம் அறிவித்துள்ளது.

Android இயங்குதளத்தில் இயங்கும் இந்த கையடக்கத் தொலைபேசியானது, Android 4.1.2 (Jelly Bean) OS- ஐக் கொண்டுள்ளது. இது தமிழ் மொழியைப் பயன்படுத்தும் வசதி உடைய Android Version ஆகும். 5 Mega pixel பிரதான கெமரா வைக் கொண்டுள்ள தோடு, LED Flash, Auto Focus, Geo-tagging போன்ற வசதி களும் இதில் உள்ளன. அதேபோல முன்புறத்தில் 0.3 Mega Pixel கெமராவையும் கொண்டுள்ளது. இதை Video Call போன்ற வசதிகளுக்குப் பயன்படுத்தலாம்.





5 Inch Capacitive தொடுதிரையைக் (Touch Screen) கொண்டுள்ள இதில், Multi Touch வசதியும் இருக்கிறது என்பது சிறப்பான விடயமாகும். தவிர Accelerometer, Proximity ஆகிய sensor களையும் கொண்டுள்ளது.

1 GB RAM, 1 GHz dual - core processor மற்றும் MediaTek MT6577 Chipset கொண்டுள்ள இதன் உள்ளக நினைவகம் 4 GB ஆகும். 32 GB வரை Micro-SD கார்ட்களை உள்ளிடும் வசதியும் உள்ளது. அத்தோடு, Li-Ion 2000 mAh மின்கல இணைப்புடன் 4.30 மணி நேர Talk Time ஐக் கொண்டுள்ளது. இவற்றோடு, ஏனைய நவீன கையடக்கத் தொலைபேசிகளைப் போலவே 3G, Bluetooth, Wi-Fi, GPS, Java போன்ற வசதிகளும் இந்த கையடக்கத் தொலைபேசியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.






# QR Code Image களை உங்கள் கணினியில் Scan செய்ய ஓர் இலவச மென்பொருள்




QR Code ஐப் பற்றி பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்திருக்கும். இது ஓர் ரகசியக் குறியீட்டு முறை. ஒரு சதுரத்தினுள் அடக்கப்பட்டிருக்கும் இந்த QR Code படத்தினுள் Texts, Links, Phone Numbers, Email Address, vcards போன்ற தகவல்களை மறைத்து வைத்து ரகசியமாகப் பகிரலாம்.

அண்மைக்காலம் வரை QR Code இனை மொபைல்கள் மற்றும் இணையத்தளங்களின் உதவியுடன் Scan செய்து, அவற்றிலுள்ள தகவல்களைப் பெறுவது வழமையாக இருந்தது. www.-onlinebarcodereader.com போன்ற இணையத்தளங்கள் QR Code களை Scan செய்ய உதவுகின்றன. ஆயினும், இணைய இணைப்பு இல்லாமலேயே QR Code இனை, நாம் உபயோகிக்கும் Windows கணினியிலும் Scan செய்துகொள்ளலாம். QR Code Desktop Reader என்ற இலவச மென்பொருள் இந்த வேலையைச் சுலபமாகச் செய்கிறது. அது எவ்வாறு சாத்தியமாகின்றது எனப் பார்ப்போம்.

✱ முதலில் http://www.codetwo.com/freeware/qr-code-desktop-reader/ தளத்தில் சென்று QR Code Desktop Reader மென்பொருளை பதிவிறக்கம் செய்து, கணினியில் நிறுவிக்கொண்டு, மென்பொருளைத் திறந்துகொள்ளுங்கள்.


✱ நீங்கள் Scan செய்யவேண்டிய QR Code உங்கள் கணினியில் இருந்தால் From File என்பதைத் தெரிவுசெய்து, அந்தப் படத்தை Select செய்துகொள்ளவும்.

அல்லது QR Code Image ஆனது, ஏதேனும் இணையத்தளத்தில் இருந்தால், அந்த இணையப் பக்கத்தைத் திறந்துகொண்டு, இந்த மென்பொருளில் From Screen என்பதை க்ளிக் செய்து, அந்த QR Code Image ஐத் தெரிவுசெய்யவும்.

✱ QR Code படத்தினைத் தெரிவுசெய்தவுடன், குறித்த படத்தில் மறைந்துள்ள தகவல்களை இந்த மென்பொருள் காட்டும். அதனை உங்கள் கணினியில் சேமித்துக்கொள்ளும் வசதியும் இந்த மென்பொருளில் உள்ளது.

இனி நீங்களும் QR Code Image களை இந்த முறையில் உங்கள் கணினிகளிலேயே சுலபமாக Scan செய்துகொள்ளலாம்.






# Outlook.com 400 மில்லியன் கணக்குகளை எட்டியது!

சில வருடங்களுக்கு முன்னர் பிரபல மின்னஞ்சல் சேவை வழங்கும் நிறுவனமாக Hotmail திகழ்ந்தது. இதற்குப் பதிலாக, Microsoft நிறுவனத்தினால் Outlook.com மின்னஞ்சல் அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்டது.

இந்தத் தளத்தின்மூலம் தற்போது மின்னஞ்சல் சேவையைப் பெறுபவர்களின் எண்ணிக்கை 400 மில்லியனை எட்டிவிட்டதாக Microsoft நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்துடன் Hotmail தளத்தினை முற்றிலும் நிறுத்திவிட்டு, அதன் பயனாளர்களை Outlook தளத்துக்கு மாற்றவிருப்பதாக Microsoft அறிவித்திருந்தது. அதன்படி, குறித்த மாற்றும் நடவடிக்கை நிறைவுபெற்ற பின்னரே, இந்த எண்ணிக்கையை Outlook எட்டியதாக தெரியவருகிறது.

Outlook தளமானது, இலகுவாகக் கையாளும் தன்மையைக் கொண்டிருப்பதோடு, வேறுபட்ட மின்னஞ்சல் முகவரிகளிலிருந்தும் இதனூடாக மின்னஞ்சல்களை அனுப்பும் வசதியையும் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இணைக்கவேண்டிய படங்கள், கோப்புக்கள் போன்றவற்றை மின்னஞ்சலில் Attach செய்யாமல்,அவை பதிவேற்றப்பட்டிருக்கும் தளங்களிலிருந்து நேரடியாகவே இணைத்து அனுப்பக்கூடிய சிறப்பையும் இது உள்ளடக்கியுள்ளது.

இதேவேளை, Hotmail கணக்குகளை வைத்திருக்கும் பயனர்கள் தற்போதும் அவற்றினைப் பயன்படுத்துவதாகவும் இவற்றினை Outlook.com ஊடாகத் தொடர்ந்தும் பயன்படுத்த முடியும் எனவும் Microsoft மேலும் தெரிவித்துள்ளது.

# Acer W3-810



கணினிச் சாதனங்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்களுள் ஒன்றான Acer நிறுவனம் ஆனது, Windows 8 இயங்குதளத்தினை அடிப்படையாக்கொண்டு இயங்கக்கூடிய 'Acer W3-810' எனும் சிறிய அளவிலான Tablet களை அறிமுகப்படுத்துகின்றது.

8.1 அங்குல அளவு மற்றும் 1280x800 Pixel Resolution உடைய தொடுதிரையினைக்கொண்ட இந்தச் சாதனமானது, 1.8GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய 1.8 GHz Dual Core Intel Atom Processor இனையும் கொண்டிருக்கின்றது. 2GB RAM இதில் இணைக்கப்பட்டிருக்கும். 2 megapixel கெமரா இருப்பதோடு, USB 2.0 Port ஐயும் இது கொண்டிருக்கின்றது.

பிரத்தியேகமான விசைப்பலகையுடன் அறிமுகமாக இருக்கின்ற இந்த Tablet இன் அறிமுக விலை 379.99 டொலர்களாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. Intel HD graphics உடன், Wi-Fi வசதியும் இதில் உண்டு. அத்தோடு, 32GB உள்ளக நினைவகத்தையும் இது கொண்டிருக்கின்றது.

விஜய் 2013, மே, 22, புதன்கிழமை V



# வைரஸ் தாக்கிய 'பென் ட்ரைவ்' இலிருந்து மறைக்கப்பட்ட கோப்புக்களை மீட்பதற்கான வழிமுறை






இப்போதெல்லாம் கோப்புக்களைச் சேமிக்க பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவது USB பென் ட்ரைவ்களைத்தான். ஆயினும், இந்த பென் ட்ரைவ்களை வெவ்வேறு கணினிகளில் உபயோகிக்கும்போது, அவற்றில் வைரஸ்கள் சுலபமாகப் புகுந்து, உள்ளே இருக்கும் கோப்புக்களைப் பாதித்துவிடுகின்றன.

இவ்வாறு பாதிக்கும் போது, உங்கள் பென் ட்ரைவில் உள்ள கோப்புக்கள் பார்வைக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டுவிடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. கணினியில் பென் ட்ரைவை திறந்து பார்த்தால், கோப்புக்கள் இருக்காது வெற்றிடமாக இருக்கும். ஆனால், properties இல் சென்று பார்த்தால், கோப்புக்கள் இருப்பது போன்றே அளவு காட்டும். இதற்குக் காரணம், எமது கோப்புக்களை வைரஸ்கள் மறைத்துவைத்திருப்பதே ஆகும்.

பென் ட்ரைவில் முக்கியமான கோப்புக்கள் ஏதும் இல்லை எனில், Format செய்து பென் ட்ரைவை வைரஸ் இன்றிப் பெறலாம். ஆனால், ஏதேனும் முக்கியமான கோப்புக்கள் அதில் இருந்தால், எப்படி அவற்றைப் பத்திரமாக மீட்டெடுப்பது என்பதே உங்கள் சிந்தனையாக இருக்கும்.

இதற்கு சில மென்பொருட்கள் உதவி செய்கின்றன. ஆயினும், உங்கள் கணினியில் நீங்கள் மேலதிகமாக எந்த மென்பொருளையும் Install செய்யாமலேயே மீட்டெடுப்பதற்கான வழியும் உண்டு. இங்கே தரப்படுகின்ற வழிமுறையின்படி, செயற்பட்டால், அந்தக் கோப்புக்களை மீட்டெடுத்துக்கொள்ள முடியும்.

1. முதலில் பென் ட்ரைவை உங்கள் கணினியில் இணைத்துக் கொள்ளுங்கள்.

2. Start→Run இற்குச் சென்று CMD என தட்டச்சு செய்து Enter செய்யுங்கள். இது Command Prompt ஐ Open செய்யும். (படம் - 1-2)


3. பென் ட்ரைவ் ஆனது, எந்த ட்ரைவில் உள்ளது எனப் பாருங்கள். My Computer செல்வதன் மூலம் இதனைக் கண்டறியலாம்.

4. உதாரணமாக: 'E ட்ரைவ்' ஆக பென் ட்ரைவ் இருக்கிறது என வைத்துக்கொள்வோம். அதற்கு நீங்கள் 'E:' எனக் கொடுத்து Enter ஐ அழுத்துங்கள்.


5. attrib -h -s -r /s/ d *.* என டைப் செய்யுங்கள்.

கவனியுங்கள், இங்கு காட்டப்பட்டுள்ளதுபோல ஒவ்வொரு space (இடைவெளி) {attrib(space)-h (space)-s(space)-r(space)/s(space)/d(space)*.*} சரியாகக் கொடுக்கப்பட வேண்டும். (படம் - 3)


6. பின்னர் நீங்கள் சரியாக தட்டச்சு செய்துள்ளீர்கள் என்பதை உறுதி செய்துகொண்டு Enter ஐ அழுத்துங்கள். சில செக்கன்கள் பொறுத்திருங்கள். அதன்பின்பு உங்கள் பென் ட்ரைவைச் சோதித்துப் பாருங்கள். மறைக்கப்பட்ட உங்களுடைய கோப்புக்கள் அனைத்தும் திரும்பவும் வந்திருக்கும்.



(படம் - 1)



(படம் - 2)




(படம் - 3)

# தொடர்பாடலில் உள்ள தடைகள்

## ஊடக பாடநெறி 34

(சென்றவாரத் தொடர்ச்சி)

தொடர்பாடல் செயன்முறையை கட்டியெழுப்புவதற்கான பொதுவான தளம், அதற்கான அனுபவப் பின்னணி என்பன




அவசியமானது. இதன் காரணமாகவும் தொடர்பியல் தடைகள் உருவாகின்றன. தொடர்பில் ஏற்படும் தடைகளைப் பிரிதொரு வகையில் வகைப்படுத்தி நோக்கமுடியும்.

- செய்தி வழி இரைச்சல்
- பொருட்குழப்ப இரைச்சல்
- சுற்றாடலில் ஏற்படும் இரைச்சல்
- பெறுநரின் உடல், உள ரீதியிலான தடைகள் என்பனவாகும்.

தொடர்பு சாதனங்கள் நிகழ்ச்சி உள்ளடக்கத்தில் பொதுத்தன்மை, எளிமை ஆகியவற்றை கடைப்பிடித்து கூடியவரை தடைகளை நிவர்த்தி செய்வதில் சிரத்தையுடன் செயற்படுகின்றது. அதன்மூலம் தொடர்பின் குறித்த இலக்கை அடைதல் இலகுவானதாக அமைகின்றது.

- செய்தி அனுப்புநருக்கும், பெறுநருக்கும் இடையில் ஏற்படும் கவனத்தை திசைதிருப்பக்கூடிய குறுக்கீடுகள் அனைத்தும் தடைகள் எனப்படுகின்றன.
- செய்தியின் மொழிசார்ந்த பலவீனங்கள், செய்தி நேர்த்தியாகத் தயாரிக்கப்படாமை கருத்தியல்சார் தடைகளை உருவாக்குகின்றன.
- ஊடகங்களுக்கு சரியான சமிக்ஞை இன்மையால், ஊடகங்களில் ஏற்படுகின்ற ஒலி, தொழில்நுட்ப ரீதியிலான தடைகள் ஊடகத்தடைகளாக அமைகின்றன.
- தொடர்பாடல் தடைகள் தவறான முடிவுகளுக்கும் தவறான கருத்துருவாக்கங்களுக்கும் வழி ஏற்படுத்திவிடுகின்றன.
- பக்கச்சார்பாக நடத்தல், தவறான புரிந்துணர்வு, உணர்ச்சி வசப்படுதல், தவறான கருத்தோற்றம், நினைவாற்றல் காரணிகளும் தடைகளுக்கு காரணமாக அமைகின்றன.



- குழப்பங்கள் தொடர்பியலில் தடைகளை உருவாக்குகின்றன. அவசியமற்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல், பொருத்தமற்ற செய்தி வடிவமைப்பு, தகவலுக்குப் பொருத்தமற்ற வகையில் விளக்கமளித்தல் என்பன குழப்பங்களையே உருவாக்கிவிடுகின்றன.



(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தளிர்கரம்

விடுபட்டுள்ள இலக்கங்களை எழுதுக.





சிறு பெட்டிகளில் சில நிறங்கள் தரப்பட்டுள்ளன. எதிரே அவற்றின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. உரிய நிறங்களைத் தெரிந்து இணைக்க.


black
purple
orange
brown



கரடிக்குட்டிக்கு நட்சத்திரக் குறியீட்டுடன் தரப்பட்டுள்ள கதவைச் சென்றடைய வழிகாட்டுங்களேன்.



இங்கு காணப்படும் மீன்களில் இரண்டு மீன்கள் மாத்திரம் ஒரே மாதிரியானவை. அவற்றைக் கண்டறிந்து நிறந்தீட்டுங்கள்.






## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலுக்கும் வியாபாரிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

வෙළෙන්දා: එන්න මහත්මයා, මොනවද ඕනේ?
என்ன மஹத்மயா, மொனவத ஓனே?
வியாபாரி: வாருங்கள் ஐயா, என்ன வேண்டும்?

කමල්: මට ඇඳුම් ටිකක් ගන්න ඕනේ. අපි ටී ෂර්ට් බලමු.
மட்ட எந்தும் டிகக் கன்ன ஓனே. அப்பி டீ ஷேர்ட் பலமு.
கமல்: எனக்கு கொஞ்சம் உடைகள் வாங்க வேண்டும். நாங்கள் டீ ஷேர்ட் பார்ப்போம்.

වෙළෙන්දා: මොන පාටින් ද ඕනේ?
மொன பாட்டின் த ஓனே?
வியாபாரி: என்ன நிறத்தில் வேண்டும்?

කමල්: නිල් පාට වගේ ගන්නකෝ.
நில் பாட்ட வகே கன்னகோ.
கமல்: நீல நிறத்தில் எடுங்கள்.

වෙළෙන්දා: මේක මහත්මයා..?
மேக மஹத்மயா..?
வியாபாரி: இது ஐயா..?

කමල්: මේක ටිකක් ලොකුයි. මීට වඩා පොඩි එක දෙන්න.
மேக டிகக் லொகுய். மீட்ட வடா பொடி எக தென்ன.
கமல்: இது கொஞ்சம் பெரிது. இதைவிட சிறியதைத் தாருங்கள்.

වෙළෙන්දා: ආ.. මෙන්න මහත්මයා.
ஆ.. மென்ன மஹத்மயா.
வியாபாரி: ஆ.. இந்தாருங்கள் ஐயா.

කමල්: මට ෂර්ට් එකකුත් ඕනේ.
மட்ட ஷேர்ட் எககுத் ஓனே.
கமல்: எனக்கு ஷேர்ட் ஒன்றும் வேண்டும்.

වෙළෙන්දා: ෂර්ට් එක මොන පාටින් ද ඕනේ?
ஷேர்ட் எக மொன பாட்டின் த ஓனே?
வியாபாரி: ஷேர்ட் எந்த நிறத்தில் வேண்டும்?

කමල්: කොළ පාටට හුරු එකක් දෙන්න.
கொல பாட்டட்ட ஹுரு எகக் தென்ன.
கமல்: பச்சை நிறத்தில் தாருங்கள்.

වෙළෙන්දා: මෙන්න මහත්මයා.
மென்ன மஹத்மயா.
வியாபாரி: இந்தாருங்கள் ஐயா.

කමල්: මගේ ගාණ කීයද?
மகே காண கீயத?
கமல்: என்னுடைய கணக்கு எவ்வளவு?

වෙළෙන්දා: රු. 1,500යි.
ரුபියල் எக்தாஸ் பன்சீயய்.
வியாபாரி: ஆயிரத்து ஐநூறு ரூபாய்.

### பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக

1. ඇඳුම් .............. ගන්න ඕනේ.
2. .............. පාටින් ද ඕනේ?
3. මේක ටිකක් ..............




Did எனும் துணை வினைச்சொல்லை, தனியொரு வினைச்சொல்லாக/ முழு வினைச்சொல்லாக (Full Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற வாக்கியங்களை மேலும் இங்கே அவதானிப்போம்.

✱ He, She, It முதலான பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் (Pronouns) பதிலாக, எழுவாய் பகுதியில் பெயர்ச்சொற்களைக் (Nouns) கையாண்டு, Did சகிதம் அமைக்கப்படும் வாக்கியங்கள் பின்வருமாறு அமைகின்றன.

(அ) ரங்கன் தனது வேலையை விரைவாகச் செய்தான்.
Rangan did his work quickly.

(ஆ) சுமதி தனது வேலையை நேர்த்தியாகச் செய்தாள்.
Sumathi did her work neatly.

(இ) அந்த நாய் தனது வேலையை கவனமாகச் செய்தது.
The dog did its work carefully.

(ஈ) அந்தக் குரங்கு தனது வேலையை முறையாகச் செய்தது.
The monkey did its work properly.

✱ Rangan did.
ரங்கன் செய்தான்.

✱ Sumathi did.
சுமதி செய்தாள்.

✱ The dog did.
நாய் செய்தது.

✱ The monkey did.
குரங்கு செய்தது.

✱ மேலும் சில வாக்கியங்களை இங்கே பார்ப்போம்.

(அ) உனது சகோதரன் தனது வேலையை நேற்றுச் செய்தான்.
Your brother did his work yesterday.

(ஆ) உனது சகோதரி தனது வேலையை புதன் அன்று செய்தாள்.
Your sister did her work on Wednesday.

(இ) உனது தந்தை தனது வேலையை நன்றாகச் செய்தார்.
Your father did his work well.

(ஈ) உனது தாய் தனது வேலையை மெதுவாகச் செய்தார்.
Your mother did her work slowly.

✱ Your brother did.
உனது சகோதரன் செய்தான்.

✱ Your sister did.
உனது சகோதரி செய்தாள்.

✱ Your father did.
உனது தந்தை செய்தார்.

✱ Your mother did.
உனது தாய் செய்தார்.

(உ) அந்தச் சிறுவர்கள் தங்கள் வேலையை செய்தனர்.
The boys did their work.

(ஊ) அந்தச் சிறுமிகள் தங்கள் வேலையை செய்தனர்.
The girls did their work.

(எ) அந்த மக்கள் தங்கள் வேலைகளை செய்தனர்.
The people did their work.

(ஏ) அந்த மாணவர்கள் தங்கள் வேலைகளை செய்தனர்.
The students did their work.

(ஐ) அந்தத் தச்சன் தனது வேலையை செய்தான்.
The carpenter did his work.

(தொடரும்)

## பிரசித்தி பெற்ற இடங்களும் அவற்றை அமைத்த மன்னர்களும்

| | |
|---|---|
| 01. சீகிரியா | - காசியப்பன் |
| 02. சிவன் கோயில் | - 1 ஆம் இராஜேந்திர மன்னன் |
| 03. ஜேதவனாராமய | - மஹாசேன மன்னன் |
| 04. அபயகிரி விஹாரை | - வலகம்பா மன்னன் |
| 05. எம்பக்க தேவாலயம் | - 5 ஆம் புவனேகபாகு மன்னன் |
| 06. அவுக்கன புத்தர் சிலை | - தாதுசேன மன்னன் |
| 07. ருவன்வெலிசாய | - துட்டகைமுனு மன்னன் |
| 08. தூபாராமய | - தேவநம்பிய தீச மன்னன் |
| 09. மிரிசவெட்டிய | - துட்டகைமுனு மன்னன் |
| 10. லோவமஹாபாய | - துட்டகைமுனு மன்னன் |
| 11. இசுறுமுனிய விஹாரை | - தேவநம்பிய தீச மன்னன் |
| 12. தலதா மாளிகை | - 1 ஆம் விமலதர்ம சூரிய மன்னன் |

எம்.முபஸ்ஸிர்,
அ/ஈத்தல்வெடுனுவெவ மு.ம.வித்.,
ஈத்தல்வெடுனுவெவ.



## சோம்பலை விட்டொழி!

ஒரு சிறுவன் மரத்தடியில் அமர்ந்திருந்தான். அது ஒரு நாவல் மரம். அவன் ஒரு சோம்பேறி. எந்த வேலையும் செய்யமாட்டான். உழைப்பு இல்லாமல் பலன் கிடைக்க வேண்டும் என்று நினைப்பான். அவன் அமர்ந்திருந்த அந்த நாவல் மரத்தின் அடியில் நாவல் பழங்கள் விழுந்து கிடந்தன. அந்த பழங்களில் மணல் ஒட்டியிருந்தது. சில பழங்களை எறும்புகள் மொய்த்துக்கொண்டிருந்தன. அந்த சிறுவன் தன் அருகே கிடந்த பழங்களை எடுத்து மணல், தூசுகளைத் தட்டிவிட்டு சாப்பிட்டான். ஒரு பழத்தை சாப்பிடும்போது அதில் ஒட்டியிருந்த கட்டெறும்பு ஒன்று அவன் உதட்டில் கடித்துவிட்டது. வேதனையுடன் அவன் மேற்கொண்டு நாவல் பழங்களை உண்ணாமல் உட்கார்ந்திருந்தான். எறும்பு கடித்த வேதனையில் உதடு தடித்தது. அவனுக்கு கண்ணீர் வந்தது.

அவ்வழியே சென்ற பெரியவர் ஒருவர் அழுதுகொண்டிருந்த சிறுவனைப் பார்த்தார். ''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார். கீழே கிடந்த நாவல் பழங்களைப் பொறுக்கி உண்டதையும், எறும்பு கடித்ததையும் கூறினான்.

''ஏன் தம்பி மரத்தில்தான் நல்ல பழங்களாய் தொங்குகிறதே. அதைப் பறித்து உண்ணலாமே! ஏன் தரையில் கிடந்த அழுக்கான பழங்களைப் பொறுக்கவேண்டும்? கட்டெறும்பிடம் கடிபட வேண்டும்'' என்று கேட்டார்.

''ஐயா மரத்தில் ஏறினால் என் உடம்பு நோகுமே'' என்றான் அந்த சோம்பேறிச் சிறுவன். சிறுவனின் பதிலைக் கேட்டு திகைத்த பெரியவர், ''சிறுவனே, இந்த சிற்றெறும்புகளைப் பார்த்தாயா? எவ்வளவு சுறுசுறுப்புடன் தமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக உழைக்கின்றன. ஆனால், நீ மரத்தில் ஏறிப் பழங்களைப் பறிப்பதற்குக்கூட சோம்பி நிற்கிறாய். உன்போன்ற பருவத்தினர் ஓடியாடி சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். அப்போதுதான் உனது எதிர்காலம் சிறப்பாக அமையும்.

''சோம்பலை முறித்தால்தான் சுகம்
என்ற கனியை சுவைக்க முடியும்'' என்றவாறு நடந்தார்.

இதைக்கேட்ட சிறுவன் 'இனி நான் சோம்பலை விட்டொழித்து சுறுசுறுப்பாக இயங்குவேன். இனிமேலும் இவ்வாறு சோம்பலாய் இருக்கமாட்டேன்'' என்றவாறு உற்சாகத்துடன் மரத்தில் ஏறினான் நாவற்பழங்களைப் பறிப்பதற்காக.

## குருதி அமுக்கம்



### உயர் குருதியமுக்கம்

சுகதேகி ஒருவரின் குருதி அமுக்கம் 120/80mm Hg ஆகும். எனினும், மன அழுத்தங்களுக்கு ஆளாகும்போது, இப்பெறுமானம் 160/90mm Hg / 160/100mmHg வரை உயரலாம். இது உயர் குருதியமுக்கத்தைக் குறிக்கின்றது. நாடிகள் விட்டத்தில் குறைதல், கொழுப்புப் படிவு, சிறுநீரகங்கள் பாதிக்கப்படல், சில மருந்து வகைகளின் தாக்கம் போன்ற காரணங்களாலேயே இது ஏற்படுகின்றது.



### தாழ் குருதியமுக்கம்

குருதி அமுக்கத்தின் அளவு, 120/80 எனும் பெறுமானத்தைவிட குறைவடைந்தால் தாழ் குருதியமுக்கம் ஏற்படும். இதற்கு போஷணைக் குறைபாடு மற்றும் அதிக குருதிப்பெருக்கு என்பனவே காரணமாகின்றன.

எப்.அப்லா, அந்நூர் மத்திய கல்லூரி,
பாணகமுவ.

## மொழிகளும் அதன் எழுத்துக்களும்

| | |
|---|---|
| ✤ தமிழ் மொழி | - 247 |
| ✤ இத்தாலிய மொழி | - 20 |
| ✤ இலத்தீன் மொழி | - 22 |
| ✤ கிரேக்க மொழி | - 24 |
| ✤ ஆங்கில மொழி | - 26 |
| ✤ ஜேர்மனிய மொழி | - 26 |
| ✤ துருக்கி மொழி | - 26 |
| ✤ பிரான்ஸிய மொழி | - 16 |
| ✤ ஸ்பானிய மொழி | - 27 |
| ✤ அரபு மொழி | - 28 |
| ✤ பாரசீக மொழி | - 31 |
| ✤ சீன மொழி | - 214 |

வ.செந்தாளன்,
யா/இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.



## உண்ணும்போது நீர் அருந்தலாமா?

பசி ஏற்படும்போது, உணவு உண்பது தவிர்க்க முடியாதது.எனினும் உணவின்போது, நீர் அருந்துவது பலரிடையே உள்ள பழக்கமாகவே உள்ளது. உணவு உண்ணும்போது, நீர் அருந்துவதால் இரைப்பையின் உள்ளே நீர் நிரம்புகின்றது. இதனால், உணவுக்குரிய இடம் குறைகிறது. இதனால், நாம் உண்ணும் உணவின் அளவும் குறைவடைகிறது.



உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள் நீர் அருந்துவதன் மூலமாக உணவைக் குறைத்துக்கொள்ள நினைப்பது தவறாகாது. ஆயினும், போஷாக்கு அவசியப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் நீர் அருந்துவதன் மூலமாக உண்ணும் உணவைக் குறைவடையச் செய்வது அவர்களது போஷாக்கிற்குத் தடையாக அமையும். இதனால் உணவு உண்ணும்போது, நீர் அருந்தும் பழக்கத்தை நிறுத்திக்கொள்வது சாலச் சிறந்ததாகும். எனினும், தேவையான அளவு உண்ட பின் நீரை அருந்தலாம்.

எம்.டீ.எஃப்.ஸஸ்னா,
கிரி/சுலைமானியா மு.வித்., குறீகொடுவ.


## இனிய நிலாக்காலம்



இரவு வானின் வெளிச்சம் நீயே!
இனிய குழந்தைகளின் மகிழ்ச்சியும் நீயே!
ரத்தினம் போல ஒளிர்ந்தாய் என்றும்
அழகு மல்லிகை மலரும் காலம்
அதுதான் அழகிய நிலாக்காலம்!


மனிதரில் வந்திடும் சோகந்தனை
மண்ணோடு மண்ணாக்குவாய் உன் முகத்தாலே!
ஏகாந்தத்திற்காக உன்னை அழைக்கிறேன்
என் முகம் மலர நீ வழிவிடுவாய்!

ஆ.சாம்பவி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.



# புத்தபிரானின் போதனைகளை உணர்த்தும் 'வெசாக் பூரணை தினம்'





வருடந்தோறும் மே மாதத்தில், பௌத்த மக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் வெசாக் பூரணை தினத்தில் புத்த பெருமானின் பிறப்பு, பரிநிர்வாணம், இறப்பு ஆகிய மூன்று முக்கிய சம்பவங்களும் இடம்பெற்றதாக குறிப்புகள் கூறுகின்றன. அந்தவகையில், இவ்வருடம் மே மாதம் 24, 25 ஆம் திகதிகளில் வெசாக் பூரணை தினம் கொண்டாடப் படவுள்ளது.

## கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாறு

நேபாளத்தின் லும்பினி என்ற இடத்தில் கி.மு 560 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மே மாதத்து பூரணை தினமொன்றில் அரசன் சுத்தோதனனுக்கும் அரசி மாயா தேவிக்கும் மகனாகப் பிறந்தார் சித்தார்த்த கௌதமர். இவரது ஜாதகத்தைக் கணித்த ஞானி யொருவர், பிற்காலத்தில் சித்தார்த்தர் அரசனாக அல்லது ஆன்மீக குருவாக உலகையே ஆட்சி புரிவான் என்று எதிர்வுகூறினார்.

சித்தார்த்தர் தனது 16 ஆவது வயதில் யசோதரையை மணந்தார். வெளியுலகைப் பற்றி அறிந்து கொள்ளாமல் இருப்பதற்காக சித்தார்த்தருக் குரிய அனைத்து வசதிகளை யும் அரண்மனையிலேயே செய்து கொடுத்தார் மன்னர் சுத்தோதனன். தனது 29ஆம் வயது வரையில் அரண்மனை சுகபோகங்களை அனுபவித்த அவர் தனது வாழ்க்கையில் அதிருப்தியடைந்தார். ஒருநாள் தனது தந்தைக்குத் தெரியாமல் உத வியாளர் ஒருவருடன் வெளியே சென்றபோது, அவர் அங்கு கண்ட நான்கு காட்சிகள் அவரது எதிர்காலத்தையே மாற்றியமைத் தது. ஊனமுற்ற ஒரு மனிதன், ஒரு நோயாளி, இறந்து அழுகிய நிலை யிலுள்ள பிணம் மற்றும் ஒரு துறவி. இக்காட்சிகளினூடாக மனித வாழ் வின் துன்பங்களை உணர்ந்து கொள்ள சித்தார்த்தர் தானும் ஒரு துறவியாக வேண்டும் என்று தீர்மானித்தார்.

துறவறம் பூண்ட சித்தார்த்தர், யோக நெறியில் கடுந்தவம் புரிந்தார். தனது தவங்களின் மூலம் உயர்ந்த யோக நிலைகளை அடைந்தாலும் உலக வாழ்க்கையின் துன்பங் களின் ஆதாரத்தை அறிய முடியா மல் அதிருப்தி அடைந்தார். தொடர்ந்தும் தவ வாழ்க்கையை கடைப்பிடித்த அவர், தனது 35 ஆவது வயதில் இந்தியாவின் தற்போதைய பீகார் மாநிலத்தில் உள்ள கயா எனும் இடத்தில் அரச மரத்தடியில் அமர்ந்து ஞான நிலையை அடையும் வரை கடும் தவம் புரிந்தார். ஒரு வார கடுந்தவத்தின் பின்னர் பெருஞ் ஞான நிலையை அடைந்து புத்தரா னார். புத்தர் ஞானம் பெற்ற அந்த இடம் தற்போது 'புத்த கயா' என்று பௌத்த மதத்தினரின் யாத்திரைத் தலமாக விளங்கு கிறது.

அதன்பின்னர் தான் மரணிக் கும் வரையில் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்து பொருளுக்கும் போகத்திற்கும் போராடும் மனிதர்களுக்கு வாழ்வின் உண்மையான அர்த்தங் களைப் போதித்தார் புத்த பிரான். பல்வேறு போதனை களைப் போதித்த புத்தபிரான் தனது 80 ஆவது வயதில் குசினாரா என்ற இடத்தில் இறையெய்தினார்.

## வெசாக் தினம்

மே மாதத்து வெசாக் பூரணை தினத்திலேயே புத்த பிரானின் பிறப்பு, பரிநிர்வாணம், இறப்பு போன்ற ஒவ்வொரு நிகழ்வுகளும் நடைபெற்றமை யால், அத்தினம் வெசாக் தினமாக அனுஷ்டிக் கப்படுகின்றது. பௌத்த நாட்காட்டியில் முக்கிய தினமான இத்தினத்தில் பௌத்த மக்கள் கேளிக்கை கொண்டாட்டங்களைத் தவிர்த்து அமைதி, தியானம், வழிபாடு ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றனர்.

## வெசாக் அலங்காரக் கூடுகள்

'வெசாக்' என்றால் வண்ண வண்ண வெளிச்சக் கூடுகள்தான் எம் மனக்கண் முன் தோன்றும். இல்லங்கள், வீதிகள், பொது இடங்களிலும் கலைநயம் மிகுந்த வண்ண வண்ண வெசாக் வெளிச் சக்கூடுகள் எண்ணெய் விளக்குகளாலும் மின்குமிழ் களாலும் ஒளியூட்டப்பட்டு தொங்கவிடப்பட்டிருக்கும்.

மக்களுக்கு புத்த பகவா னின் உன்னத பண்புகளை யும் அவரது போதனை களையும் நினைவுறுத்து வதை முதன்மை நோக்காகக் கொண்டவை வெசாக் அலங்காரங்கள். அனைத்து இன மக்களும் பௌத்த மதத்தின் பெருமையையும் வரலாற்றையும் எளிமையான வடிவில் புரிந்து கொள்வதற் கான சந்தர்ப்பமாகவும் இந்த வெசாக் தினம் அனுஷ்டிக் கப்படுகின்றது.

நன்றி : இணையம்





## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

1



## சரி, பிழை கூறுக

2

1. பழங்களில் புரதச்சத்து அதிகம் உண்டு. (........)
2. இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜீ ஆவார். (........)
3. பிரான்ஸின் தலைநகரம் மெட்ரிட் ஆகும். (........)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 34

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | |
| 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | 8 | | 9 | |
| | | | | 10 | |
| | | | | | |
| | 11 | | | | |

### மேலிருந்து கீழ்

01. நவரத்தினங்களில் ஒன்று.
02. இலங்கையிலிருந்தும் வேலை வாய்ப்புத் தேடி இங்கு செல்வர்.
04. 'இல்லை' என்பதன் எதிர்ப்பதம். (தலைகீழ்).
05. ஒரு விளையாட்டு.
06. கந்தன்.
08. திடமாக இருக்கும் பொருட்களை இவ்வாறு குறிப்பிடுவர்.

### இடமிருந்து வலம்


01. அரச பதவி வகிப்பவர் (அதிகாரத்தின் சின்னமாக) தலையில் சூடியிருப்பது.
03. துப்பாக்கியால் சுட இது தேவை.
04. எனவே.
07. வெட்டும் கருவி.
09. ஒன்றுக்கு மேற்பட்டது.
10. ஒரு ரசாயன மூலகம்.
11. 'கவிச்சக்கரவர்த்தி' என்று போற்றப்படுபவர்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 33 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | ள | க் | 2 கு | | 3 தீ |
| ளை | | | று | | று |
| 4 யா | னை | | 5 வ | டி | வு |
| ட் | | 6 தே | ர் | | கோ |
| டு | ண் | 7 வ | | 8 ப | ல் |
| | 9 க | தை | | டை | |

## ஒவ்வொரு மரக்கறி வகையிலும் எத்தனை உள்ளதென்பதை, கீழுள்ள கட்டத்தில் அந்தந்த மரக்கறிகளுக்கு அருகில் எழுதுக

5







தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.05.29 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 418
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு



## ஒருமை/பன்மை தருக

3

1. செங்கல் - ..............................
2. ஆசனங்கள் - ..............................
3. முள் - ..............................
4. பயிர் - ..............................
5. மண்டலங்கள் - ..............................
6. நீரோடை - ..............................

## அருகிலுள்ள சொற்களை உரிய கட்டங்களில் எழுதி பூர்த்திசெய்க

4




## அறிவுக்கு விருந்து - 415 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**

| | |
|---|---|
| apple | banana |
| pear | grape |
| guava | orange |
| coconut | plum |

**போட்டி: 03**



**போட்டி: 04**

சிரி, சிகை, சிறப்பு, சிரிப்பு, கை, கைப்பு, கைதி, ரிசி, திகை, திரி, திதி, திற, திறப்பு, திகைப்பு, திப்பு, நசி, நகை, நரி, நடி, நதி, நடிப்பு, நடிகை, புகை, புரி, புசி

**போட்டி: 05**

1. சென்றோம்
2. உதிர்ந்தது
3. வருவாள்
4. பாடினீர்கள்
5. அல்ல

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 415 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
*கி.நேறுஜன், கல்முனை-02.*

**போட்டி: 02**
*டி.என்.டீனா, கிண்ணியா-01.*

**போட்டி: 03**
*பி.அனுஷன், சிலாபம்.*

**போட்டி: 04**
*த.நிதர்ஷனா, பண்ணாகம்.*

**போட்டி: 05**
*அஹ்னப் சலாஹி, கஹட்டோவிட்ட.*

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம்.மப்ராஸ், புத்தளம்.
- என்.சுமதி, பண்டாரவளை.
- ஜி.கோபி, தலவாக்கலை.
- ரிஜானா பானு, கலேவளை.
- ஏ.அஸ்மீர், மதுரங்குளி.
- ஷிப்கா தாஹிர், வியாங்கல்லை.
- எஸ்.தனூஷிகா, மாத்தளை.
- ரமீஸ் அஹமட், கொழும்பு-10.
- வி.வினோஜா, சுண்ணாகம்.
- எஃப்.கதீஜா, வெலிகம.





# மாற்றுத்திறன் மாணவர்களின் கலை மேம்பாடு!

மாற்றுத்திறன்கொண்ட சிறுவர்களுக்கு உதவும் நோக்கில் நாடு முழுவதிலும் 39 கிளைகளை கொண்டுள்ள சுனெர மன்றம் அனைத்து கிளைகளிலும் நாடக செயலமர்வுகளை நடத்தி வருவதுடன், அவர்களது கலை ஆர்வத்தையும் ஊக்குவித்து வருகின்றது. இந்த மாணவர்கள் பங்குபற்றும் நாடக பயிற்சிகளுக்கு லஃபார்ஜ் மஹாவலி சீமெந்து நிறுவனம் அனுசரணை வழங்கி வருகின்றது. வருடந்தோறும் நடைபெறுகின்ற நாடக திருவிழாவான 'சமனல யாய' நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களையே படத்தில் காண்கிறீர்கள். *(தகவல்: சுரேஸ்)*

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



வியாங்கல்லை,அகலவத்தையைச் சேர்ந்த றம்ஸான்-றிஸ்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் பிர்தவ்ஸ், தனது முதலாவது பிறந்தநாளை 17.05.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: எம்.எம்.எஃப்.முனீபா)*



ஹட்டன், இல-36/B பன்சல வீதியைச் சேர்ந்த சந்திரசேகரன்-விமலாதேவி தம்பதியரின் செல்வப்புதல்வி பிருந்தா, தனது எட்டாவது பிறந்ததினத்தை 16.05.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றனர்.



மட்டக்களப்பு-கல்லியங்காடு ஆஞ்சநேயர் குறுக்கு வீதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி-சுலோசனா தம்பதியரின் செல்வப்புதல்வி சரிஸ்ஹா, தனது பதினோராவது பிறந்தநாளை 16.05.2013 அன்று கொண்டாடினார்.இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மாமாங்கேஸ்வரர் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: ஆர்.கிருஷ்ணபிள்ளை)*



வெலிகாமம் கோட்டகொடையைச் சேர்ந்த ருதைன்-ருக்ஸானா தம்பதியரின் செல்வப்புதல்வி பாத்திமா ரும்தா, தனது பிறந்ததினத்தை 5.5.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல கலைகளும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



புத்தளம், 5 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மாஹிர்-ஹம்ஸிலா தம்பதியரின் செல்வப்புதல்வன் முஹமட் மப்ராஸ், தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 13.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

'ஜியோட்டோ' என பொதுவாக அழைக்கப்படும் இவர், 1266 ஆம் ஆண்டு இத்தாலியின் ஃப்ளோரன்ஸ் நகரில் பிறந்தார். இத்தாலிய மறுமலர்ச்சிக்காலத்தில் வாழ்ந்த சிறந்த ஓவியராகவும் கட்டடக்கலைஞராகவும் இவர் அறியப்படுகின்றார்.

ஜியோட்டோவால் வரையப்பட்ட ஓவியங்களை பதுவாவிலுள்ள ஸ்க்ரோவெஜ்னி தேவாலயத்திலும் (எரீனா தேவாலயம்) அசீசியிலுள்ள சென். ஃப்ரான்சிஸ் பெஸிலிக்காவிலும் காணலாம்.




ஜியோட்டோ டி பொன்டோன் (1266-1337)

ஜியோட்டோ தனது ஓவியங்களில் கிறிஸ்தவ, பைசாந்திய கலை மரபுகளையும் பின்பற்றியுள்ளார். இவரது ஓவியங்களில் வரும் மனித உருவங்கள் முப்பரிமாணத் தோற்றத்தை வெளிப்படுத்துவதாகவும் அளவில் பெரியதாகவும் வரையப்பட்டிருப்பதைக் காணலாம். அந்த வகையில், முப்பரிமாண முறையில் ஓவியங்களை வரைந்த முதலாவது ஐரோப்பியராக ஜியோட்டோ கருதப்படுகின்றார்.

முடிசூடிய மரியா (Madonna Enthroned), எகிப்து நோக்கிய பயணம் (The flight into Egypt). கிறிஸ்துவின் துயரம், மாகி வழிபாடு என்பன ஜியோட்டோவின் பிரசித்தி பெற்ற ஓவியங்களில் சிலவாகும். ஜியோட்டோ, 1337 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.



எகிப்து நோக்கிய பயணம்



கிறிஸ்துவின் துயரம்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



த.ஜீவித்திரன்,
பெரும் தெரு விக்னேஸ்வரா ம.ம.வித்.,
திருகோணமலை.



ச.தனோஜன்,
சாவகச்சேரி இந்.கல்.,
சாவகச்சேரி.



எம்.ஹஸ்மின்,
ஈதல்வெடுனுவெவ மு.ம.வித்.,
ஈதல்வெடுனுவெவ.



சசிகான்,
தலாது ஓயா த.ம.வித்., தலாது ஓயா.



ரா.பாவேந்தன்,
புதுக்குடியிருப்பு ம.கல்., முல்லைத்தீவு.



எம்.ஆகில்,
பதுரியா மத்.கல்.,
மாவனல்லை.



ச.கஜந்தன்,
விபுலானந்தா மத்.கல்., காரைதீவு.



எச்.ஹஸன்,
புகாரி நகர் மு.வித்.,
முள்ளிப்பொத்தானை.

# ஆள்பதி சேர்.தோமஸ் மெயிட்லண்ட்

ஆள்பதி பிரட்ரிக் நோத் அவர்கள் சென்றபின் இலங்கையில் ஆங்கில ஆள்பதியாக நியமனம் பெற்று வந்தவர்தான் சேர்.தோமஸ் மெயிட்லண்ட் அவர்கள். அவர் ஆள்பதி நோத் அவர்களின் குண இயல்புகளுக்கு நேரெதிராகத் திகழ்ந்தார். எனினும், முன்னாள் ஆள்பதியின் காலத்திலேயே இலங்கையின் கரையோரப் பிரதேசம் முழுமையாக நேரடி ஆங்கில முடியின்கீழ் கொண்டுவரப்பட்டது. ஆனால், அதனை சரியான முறையில் நிர்வகிக்க அவரால் முடியவில்லை. அரசியலமைப்புச் சீர்திருத்தம் போன்ற நடவடிக்கைகளை சரியான முறைக்கு கொண்டு வர வேண்டியது போன்ற பல்வேறு காரியங்களை புதிய ஆள்பதி மெயிட்லண்ட் அவர்களே செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன், அவர் கண்டி ராச்சியத்துடன் யுத்தம் மேற்கொள்ளவதில் அக்கறையின்றியும் இருந்தார்.


அத்துடன் ஆள்பதி மெயிட்லண்ட் பிலிமத்தலாவையுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவர் ஒரு நாட்டை ஆளும்போது உள்ளூர் கலாசாரம் மற்றும் மரபுரீதியான பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணக்கருவில் இருந்தார்.


குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகளை தீர்ப்பதற்காக ஐந்து பிரதேச நீதி மன்றுகளை ஆள்பதி மெய்ட்லண்ட் நிறுவினார். கொழும்பு, புத்தளம் மற்றும் சிலாபம், யாழ்ப்பாணம், திருகோணமலை, காலி ஆகிய இடங்களிலேயே அவை நிறுவப்பட்டன. பிரதேச நீதவான்கள் மற்றும் வரவுசெலவு முகவர்களுக்கிடையே மாற்றங்களை ஏற்படுத்தினார். இது நாட்டு மக்களின் நலன் மற்றும் வசதி கருதியும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாக இருந்தன.



# பரிணாமவாதத்தின் தந்தை
# சார்ள்ஸ் டாவின்

1809 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி இங்கிலாந்தின் ஷெரொவ்ஸ்பரி என்ற இடத்தில் சார்ள்ஸ் டாவின் பிறந்தார். இவரது தந்தை ரொபர்ட் டாவின். இவர் ஒரு மருத்துவராகத் திகழ்ந்தார். டாவினின் பாட்டனாரும் ஒரு மருத்துவரே! அதேபோன்று டாவினையும் ஒரு மருத்துவராக்க வேண்டும் என்பதே அவரது தந்தையின் நோக்கமாக இருந்தது. மருத்துவப் பின்னணியில் வளர்ந்த டாவினுக்கு சூழலுடன் இணைந்து செயற்படவேண்டும் என்ற விருப்பம் மற்றும் அக்கறை ஏற்பட்டது. அதனால், தனது தந்தையாருக்கு விருப்பமான மருத்துவத் தொழிலை புறந்தள்ளி விட்டு ஒரு மதபோதகராக மாறும் எண்ணத்தினை டாவின் வளர்த்துக்கொண்டார். எனினும், சிறுவயது முதலே சுற்றுப்புறச் சூழலை ஆராயும் ஆர்வம் அவருக்கு இருந்தமையால், இந்த அனைத்து எண்ணங்களும் அவரை விட்டு விலகிச் சென்றன.





உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பெறப்பட்ட அறிவைப் பயன்படுத்தி, உலகின் பலதரப்பட்ட மாறுதல்கள், தாவரங்கள் மற்றும் மானிடர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய நூல்கள் பலவற்றை 1840 முதல் 1881 வரையிலான காலப்பகுதியில் சார்ள்ஸ் டாவின் எழுதியுள்ளார்.


## 1809
பெப்ரவரி 12 ஆம் திகதி இங்கிலாந்தின் ஷெரொவ்ஸ்பரியில் குடும்பத்தின் ஆறாவது குழந்தையாக டாவின் பிறந்தார். தந்தையார் ரொபர்ட் டாவின். தாயார் சுசானா டாவின் ஆவார். டாவினின் எட்டாவது வயதிலேயே தாயார் இறந்துவிட்டார்.



## 1825
மருத்துவராகப் பட்டம் பெற எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார்.

## 1828
இக்காலகட்டத்தில் பட்டம் பெறும் முனைப்புகளில் டாவின் தீவிரமாக ஈடுபட்டார். தாவரவியல் பேராசிரியரான ஜோன் ஸ்டீவன்ஸ் ஹென்ஸ்லோவுடன் சிறந்த நட்புறவைப் பேணினார்.

## 1831
மருத்துவப் பட்டப்படிப்பைக் கைவிட்டு கிறிஸ்டி கல்லூரியில் கலைத்துறையில் பட்டம் பெற்றார்.



## 1831
டிசம்பர் 27 ஆம் திகதி ஆரம்பமான உலக சுற்றுப் பயணத்தில் பேராசிரியர் ஜோன் ஸ்டீவன்ஸ் ஹென்சலோவுடன் இணைந்து கொண்டார். இந்த பயணத்தின்போது, இயற்கை உயிரிகள் பலவற்றை ஆராயும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

## 1836
ஒக்டோபர் 2 ஆம் திகதி மீண்டும் இவர் இங்கிலாந்து திரும்பினார்.

## 1839
எமா வெட்குட் என்ற பெண்ணை டாவின் திருமணம் செய்தார். இவர்களுக்கு பத்துக் குழந்தைகள் பிறந்தன. இவர்களில் எழுவர் மட்டுமே உயிர் வாழ்ந்தனர்.

## 1840
தமது சுற்றுப்பயணத்தின் போது, ஆராய்ந்து அறிந்த தகவல்களின் அடிப்படையில் Zoology of the Voyage of the Beagle என்ற நூலை எழுதினார்.


## 1842
பரிணாமவாதம் பற்றிய கோட்பாடு மற்றும் அதன் தொடர்பு நிலைகள் குறித்தான முதலாவது ஆவணத்தினை தயாரித்தார்.

## 1858
இயற்கை விஞ்ஞானியான அல்பிரட் ரசல் வொலஸுடன் இணைந்து செயற்பட்டார். பரிணாமவாத கோட்பாடு குறித்து 20 ஆண்டுகளாகக் கற்று வந்தார்.


## 1882
சார்ள்ஸ் டாவின் அவர்கள் ஏப்ரல் 19 ஆம் திகதி லண்டன் மாநகரில் இயற்கை எய்தினார்.

மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடர்பாக சார்ள்ஸ் டாவின் தயாரித்த பிரபல்யமான ஆவணம்





ஐரோப்பா முழுவதும் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்திய 1859 நொவெம்பர் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட உயிரின் தோற்றம் பற்றிய விடயங்கள் உள்ளடங்கிய Origin of Species நூல்.




HMS Beagle
சார்ள்ஸ் டாவின் உலகம் எங்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப் பயன்படுத்திய HMS Beagle கப்பல்



உலகம் முழுவதும் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது, அவதானித்த உயிரினங்களை சார்ள்ஸ் டாவின் ஓவியமாக வரைந்துள்ளார்.











சார்ள்ஸ் டாவினை நினைவுகூரும் முகமாக செதுக்கப்பட்டுள்ள நினைவுச் சிலைகளும் வடிவமைக்கப்பட்டுள்ள முத்திரைகள் சிலவும்.







சார்ள்ஸ் டாவின் வெற்றி கொண்ட பதக்கங்கள் சில...
1. The Royal Medal (1853).
2. The Wallaston Medal (1859).
3. The Copley Medal (1864)



# கயிற்றை இழுப்பதற்கு பயன்படும் கருவிகள்

எந்த ரகத்திலான கயிற்றையும் அளவிற்கு அதிகமான அழுத்தத்துடன், இரு முனையில் வலுவுடன் இழுத்தால் அவை அறுந்து விடுவதுண்டு. இவ்வாறான, கயிற்றின்மூலம் எந்தவொரு பயனையும் அடையமுடியாமல் போய்விடலாம். எனவே, வலுவாக இழுக்கப் படுகின்ற கயிறு அறுந்துபோகாமல் இருப்பதற் கான பாதுகாப்பான வழிகள் கிடையாதா? என்று நீங்கள் கேட்கலாம்.



உண்மையில் அதற்கும் வழிமுறைகள் உள்ளன. அதாவது, கயிற்றில் இயந்திர ஆதாரத்தைக் கொடுப்பதே அந்த வழிமுறையாகும்.

இந்த வழிமுறையானது, ப்ளொக் டெக்கல் (Block tackle) என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறான 'ப்ளொக் டெக்கல்'களை அமைப்பதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன.

1. ஒற்றை அல்லது இரட்டைக் கம்பிகளைப் பயன்படுத்தல்.
2. பலமான மரத்தைப் பயன்படுத்தல்.

விஜய் சாரணர் உலகம்


## கப்பியின் மூலம் 'ப்ளொக் டெக்கல்' செய்யும் முறை

இரண்டு பக்கமாக இழுபடுகின்ற கயிற்றின் நடுப்பகுதியில் ஒற்றை அல்லது இரட்டைக் கப்பிகளை பொருத்திக் கொள்ளவேண்டும். படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, கயிற்றினை கப்பிச் சில்லுகளின் வழியே உள்நுழைத்து கயிற்றினை இழுக்க வேண்டும். இதன்மூலம் கணிசமான பாரத்தைக் குறைத்துக்கொள்ள முடிவதுடன், இதற்கென அதிக சிரமத்தை மேற்கொள்ள வேண்டியதுமில்லை.


குறிப்பு: கப்பியின் உறுதித்தன்மை மற்றும் அதன் செயற்திறனை முன்கூட்டியே ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

## பலமான மரத்தைப் பயன்படுத்தல்

'கப்பி'கள் கிடைக்கப்பெறாதவர்கள் ப்ளொக் டெக்கலுக்கென பலமான மரத்தைப் பயன்படுத்த முடியும். அதன்படி, மர ப்ளொக் டெக்கலை தயாரித்துக் கொள்ளும் வழிமுறையொன்றைப் பார்ப்போம். இழுக்கப்படுகின்ற கயிற்றின் நடுப்பகுதியில் ப்ளொக் டெக்கலை போடுவதில் சாரணர்கள் கவனமாக இருத்தல் வேண்டும்.



நீளத்தில் கூடிய கயிற்றினை இதற்குப் பயன்படுத்துவதுடன், மரத்தினால் உருவாக்கப்பட்ட ப்ளொக் டெக்கலினுள் நடுப் பகுதியில் சரியாக இது பொருந்தியிருக்க வேண்டும்.



இவ்வாறு இயல்பான அமைப்பில் கயிற்றினை தொடர்பு படுத்துவதனால், உங்களது சாரணர் திறன் வெளிப்பாட்டை உணர்த்துவதற்கும் அது கைகொடுக்கும். நீளம் கூடிய கயிற்றினை வெட்டி வீணடிக்காமல் பயன் படுத்தவேண்டும். கயிற்றின் பாதுகாப்பிற்கு ஏற்ற வழிமுறைகளை இதன்மூலம் நீங்கள் உணர்த்த முடியும்.

# திசையறி கருவியின் வரலாறு




தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற 'கய்ரோ' எனப்படும் விமானம் மற்றும் கப்பல் பயணங்களுக்கான திசையறி கருவி.

திசையறி கருவியை முதன்முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் சீனர்களாவர். கி.மு 206 இற்கும் 221 இற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 'கொம்பாஸ்' எனும் திசையறி கருவியானது, ஆரம்ப காலத்தில் 'ஃபென்ஷூய்' நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

எனினும், கி.பி 1371 இற்கும் 1435 இற்கும் இடைப்பட்ட காலப்பருவத்தில் ஷென்க்னி என்ற சீனர் தனது கடற்பயணங்களுக்காக திசையறி கருவியொன்றை முதன்முறையாகப் பயன்படுத்தியுள்ளார்.

இயந்திரமொன்றின் துணைகொண்டு திசையை அறியக்கூடிய இதன்மூலம் திசைகளை அறிந்து கொள்வதற்கும் படகினை சரியான திசையில் கொண்டு செல்வதற்கும் திசையறி கருவி பயன்பட்டுள்ளது. இந்த காலகட்டத்தில் திசையறி கருவிகளைத் தயாரிப்பதற்கு காந்தக்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாளடைவில் தொழில்நுட்ப வளர்ச்சியினைத் தொடர்ந்து பல்வேறு தரத்திலும் வடிவிலும் திசையறி கருவிகள் தயாரிக்கப்பட்டன.



இதற்கு மேலதிகமாக விமானங்கள் கப்பல்களில் பயன்படுத்தப்படுவது Gyro Compass ஆகும். விலை மதிப்புடைய கய்ரோ திசையறிகருவி கோள வடிவத்தைக் கொண்டது.



பிரிஸ்மடிக் கொம்பாஸ்



'சில்வ' கொம்பாஸ்



லென்ஸடிக் கொம்பாஸ்

## பல்வகை திசையறி கருவிகள்

உலகில் பாவனையிலுள்ள திசையறி கருவிகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தயாரிக் கப்பட்டுள்ள விதத்தைப் பொறுத்தே இவ்வாறு பிரிக்கப் பட்டுள்ளன.

ஒன்று -சாரணர்கள், இராணுவத்தினர் உட்பட, தரைப்பகுதி வாழ் மனிதர்களுக்கென தயாரிக் கப்பட்டவை.

இரண்டு - விமானம், கப்பல் பயணங்களுக்கென தயாரிக் கப்பட்டவை.



# கடலிலுள்ள ப்ளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்தும் புதிய வழிமுறை
# Ocean Cleanup Array

மனிதனால் கடலில் சேர்கின்ற ப்ளாஸ்டிக் கழிவுப் பொருட்களின் அளவு 7 மில்லியன் தொன்னிற்கும் அதிகம் என்று கூறப்படுகின்றது. கடலில் சங்கமிக்கின்ற ஆறுகளின் மூலமாகவே இவை கடலில் கலக்கின்றன. இவற்றால் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படுகின்ற அழிவுகளும் ஏராளம். இவற்றை அப்புறப்படுத்துவதும் இலகுவான காரியமல்ல. ஆனால், இவற்றை அப்புறப்படுத்துவதற்கான புதிய வழிமுறையொன்றை முன்வைத்துள்ளார் 19 வயதேயான அமெரிக்கா இளைஞரொருவர்.


புதுவகை படகொன்றினை அடியொட்டி மேற்கொள்ளப்படுகின்ற இந்த வழிமுறை 'Ocean Cleanup Array' என்று அழைக்கப்படுகின்றது. அதன் தொழிற்பாடு இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

ஆறுகளில் சேர்ந்துள்ள கழிவுகள்

| | |
|---|---|
| கடலில் உள்ள ப்ளாஸ்டிக் கழிவுப்பொருட்களின் அளவு தொன் | 7,250,000 |

இந்த பரீட்சிப்புப் பணியானது, தொழில்நுட்பத்துறை, கடற்துறை, புவியியல், சுற்றுச்சூழல், கடல் சட்டம், மீள்சுழற்சி முறை ஆகிய கட்டமைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது







| | |
|---|---|
| இத்திட்டத்திற்கு செலவாகின்ற நிதித் தொகை டொலர்களில் | 80,000 |
| முற்றுமுழுதாக கடற்பகுதியை சுத்தப்படுத்துவதற்குத் தேவையான காலம் - வருடங்களில் | 05 |

கடலில் உள்ள ப்ளாஸ்டிக் துண்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள உயிரினங்கள்






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, மே மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 22, 2013.